ஓம்

திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றுந்

திங்கள்தோறும் வெளிவருவது

சிலம்பு ௭ } மெய்கண்டான்யாண்டு-௭௱௯ வைகாசித்திங்கள் 1929௵ மே௴—ஜூன்௴ { பரல் ௫

பொன்னார் மேனியனே புலித்தோலை யரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேன் மிளிர்கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுண் மாணிக்கமே
அன்னே யுன்னையல்லா லினியாரை நினைக்கேனே.

(சுந்தரர்)

உரை:

பொன், பொன்னிறம்; ஆகுபெயர்; மின்னும் இது. ஆர்-பொருந்திய; அசைத்து-உடுத்து; மன்-தலைவன்; திருமழபாடி யென்னுந் திருப்பதியி லெழுந்தருளியிருக்கும் இறைவனை நம்பியாரூரர் 'மாணிக்கமே' யென்று விளித்து ஒவ்வொரு பாட்டிலும் பாடுகின்றாராதலின், 'மாமணி' 'மாணிக்கம்' என்னும் இரண்டனுள் பின்னது அம் முறைபற்றி வந்ததென்றும், முன்னது அருமை நோக்கி வந்ததென்றுங் கொள்ளல் வேண்டும்.

கீளார் கோவணமுந் திருநீறுமெய் பூசியுன்றன்
றாளே வந்தடைந்தேன் றலைவாவெனை யேன்றுகொணீ
வாளார் கண்ணிபங்கா மழபாடியுண் மாணிக்கமே
ஆளாய் நின்னையல்லா லினியாரை நினைக்கேனே.

கீள்-நூலால் செய்யப்பட்ட அரைஞாண்; 'என்றுகொள் நீ' யென்க; வாள், ஒளிக்கு உவமை; 'யாரை நினைக்கேன், நீ என்றுகொள்' என்று முடித்துக்கொள்க.

எம்மா னெம்மனையென் றெனக்கேட்டனைச் சார்வாகா
ரிம்மா யப்பிறவி பிறந்தேயிறந் தேய்த்தொழிந்தேன்
மைம்மாம் பூம்பொழில்சூழ் மழபாடியுண் மாணிக்கமே
யம்மா னின்னையல்லா லினியாரை நினைக்கேனே.

'அம்மான்' தந்தைக்கு ஒரு பெயர்; 'தந்தையே அம்மான்' என்பது சூடாமணி நிகண்டு. 'எம் தந்தை' எந்தையாயினாற்போல, 'எம் அம்மான்' எம்மான் என்றாயிற்று. இது மரூஉ. எனவே, எம் அம்மான் எம் அனை என்று எனக்கு எள்தனைச் சார்வாகார் என்றது, என் தந்தையும் என் தாயும் என்று எனக்கு நெருங்கிய உறவினராயுள்ளாரும் சிறிதுந் துணையாகா ரென்று கூறியபடி யென்க. எள்தனை, எள்ளளவும்; மாயப் பிறவி யென்றார், நில்லாதுஅழிதலின். மைம் மாம் பூம் பொழில், இருள்சூழ்ந்த பெரிய அழகான சோலை; இருள்சூழ்ந்த வென்றது, பொழிலின் நெருக்கத்தையுந் தழை பரந்த செழுமையையுங் காட்டும்.

சுந்தரமூர்த்தி நாயனார் திருவாலம்பொழிலில் எழுந்தருளியிருந்த இரவு இறைவன் அவர் கனவிற் சென்று 'மழபாடிக்கு வர மறந்தாயோ' என்றருளினமையின், 'நின்னையல்லால் இனி யாரை நினைக்கேனே' என்று இவ்வாறு நாயனார் குழைந்து பாடுவாராயினர்.

மலையா ரருவித் திரண்மா மணியுந்திக்
குலையாரக் கொணர்ந்தெற்றி யொர்பெண்ணை வடபாற்
கலையா ரல்குற் கன்னியராடுந் துறையூர்த்
தலைவா வுனைவேண்டிக் கொள்வேன் றவநெறியே.

குலை, கரை; எற்றி, மோதித்தள்ளி; கலை, மேகலை; அன்றி ஆடையுமாம். தவநெறியை அருள்வழி யொழுகும் அருள் நெறி யென்று கொள்க.

இளவழகனார்.

சங்கநூல்களும் சைவமும்

[திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்]

பல்லாயிரம் ஆண்டுகள் சங்கங்களால் ஆராய்ந்து தூய்மையுடன் வளர்க்கப்பெற்ற பெருமை தமிழ்மொழிக் குரியது. அதனுலேயே தமிழைக் குறிக்கு மிடத்துச் "சங்கத்தமிழ்" என்று கூறும் வழக்கும் ஏற்படலாயிற்று. முச்சங்கத்தாரால் இயற்றப்பட்டனவாகிய முத்தமிழ் இலக்கியங்களும் இலக்கணங்களும் எண்ணிறந்தன. வானநூல், எண்ணூல், மருந்துநூல் முதலிய கலைகளும் அக்காலத்தே சிறந்து விளங்கின. அக் கலைகளே யன்றி, இசை நாடக நூல்களிற் பெரும்பாலனவும் இறந்தொழிந்தன. தொல்காப்பியம், இறையனுர் களவியல் என்னும் இலக்கணங்களும், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு என்னும் இலக்கியங்களுமே இப்பொழுது நமக்குக் கிடைத்துள்ள சங்க நூல்களாகும். இவையெல்லாம் இயற்றமிழின்பாற் பட்டவை, தொல்காப்பியம் இயற்றமிழ்ப்பகுதி யனைத்தையும் முற்ற வெடுத்து வரையறை செய்யும் விழுமிய முழு நூலாகும். இறையனுர் களவியல் இயற்றமிழின் ஒரு பகுதியாகிய அகப்பொரு ளொன்றினையே இனிது விளக்குவது. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்பன பற்பல புலவர்கள் பாடிய பாட்டுக்களைச் சில முறை பற்றித் தொகுத்து வைத்தவை. பதினெண் கீழ்க்கணக்கைச் சேர்ந்த நாலடியாரும் அத்தகையதே. அத் தொகுப்பினுள்ள திருக்குறள் என்னும் தெய்வச் செந்தமிழ் நூலைத் தனியாக நினைவு கூர்தல் வேண்டும். மேற்காட்டியவை யன்றி, மதுரைக் கூல வாணிகன் சாத்தனுர் என்னும் சங்கப்புலவ ரியற்றிய மணிமேகலைக் காப்பியமும், அவரோடு ஒரு காலத்தவரும், பரணர் முதலிய சங்கப் புலவர்களாற் பாடப்பட்ட சேரன் செங்குட்டுவனுக்குத் தம்பியாருமாகிய இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரமும் சங்க நூல்களுடன் சேர்த்தெண்ணத் தக்கனவாகும்,

இவையெல்லாம் தமிழகத்தின் பண்டைய வரலாற்று நூல்களென மதிக்கத்தக்கவை. மிகப் பழைய நாளிலே தமிழகத்தின்

அரசியல் நிலை எவ்வாறிருந்தது, அக்காலத்துத் தமிழ் வேந்தர்கள் வீரத்திலும், நீதியிலும், வண்மையிலும் எங்ஙனம் சிறந்து விளங்கினார்கள், அற்றை நாளிலே சமய நிலை, சமுதாய நிலைகள் எவ்வாறிருந்தன, வேளாண்மை, வாணிகம், கைத்தொழில்கள் எப்படி உயர்நிலை அடைந்திருந்தன, ஆடவரும் மகளிரும் எங்ஙனம் கல்வியிற் சிறந்து விளங்கினர் என்பன போன்றவைகளை அறிந்து கொள்ளுதற்குச் சங்க நூல்களே சிறந்த கருவிகளாகவுள்ளன, அக்கருவிகள் கொண்டு தமிழகத்திலே பண்டு சைவ சமயம் எந்நிலையிலிருந்த தென்பதனை விளக்குவதே இவ்வுரையின் நோக்கம்.

இடைக் காலத்தும் பிற்காலத்தும் தோத்திரங்களாகவும் சாத்திரங்களாகவும் புராணங்களாகவும் சமய நூல்கள் பலப்பல தோன்றி யுள்ளன. சங்க விலக்கியங்களில் அத்தகைய நூல் ஒன்றும் காணப்படவில்லை யென்பது உண்மையே, சங்க காலத்தில் அத்தகைய நூல்கள் தோன்றாமைக்கும், பின்னர் அவை தோன்றினமைக்கும் தக்க காரணங்கள் உண்டு. ஒரு நாட்டின் வரலாற்றையும், அந்நாட்டு மொழி வரலாற்றையும் நுணுகி ஆராயின் அவ்விரண்டும் ஒத்தியங்குதல் காணப்படும். எனவே தமிழ் மொழியானது நாளடைவில் எய்தியிருக்கும் வேற்றுமைகளிலிருந்து தமிழகமானது எங்ஙனம் வேற்றுமை யடைந்து வரலாயிற்று என்பது புலப்படும் என்க, இனி, சங்க விலக்கியங்களிலே சமய நூலாக ஒன்றும் காணப்படாவிடினும், அக்காலத்தே சமயமானது திண்ணிய நிலையிலிருந்த தென்பதற்குரிய சான்றுகள் உள்ளன, சங்கச்செய்யுட்களெல்லாம் தமிழுக்கே சிறப்பாகவுள்ள பொருளிலக்கணத்திற்கு இலக்கியமாக அமைந்தவை. அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருளும் அகமும் புறமுமாகிய பொருட் பகுதியில் அடங்குகின்றன. வேதமுதலிய கலைகளெல்லாம் அந் நாற் பொருளையும் உணர்த்தவே யெழுந்தன. எனவே சங்க விலக்கிய மனைத்தும் சமய சாரமாகவே யுள்ளன வென்பது பெறும். இனி, நுணுகிய ஆராய்ச்சி வழியை விடுத்து வெளிப்படையாக வுள்ள குறிப்புகளைக்கொண்டு சைவ சமய நிலையை நோக்குதும்.

முதுகுடுமிப் பெருவழுதி என்னும் பாண்டி வேந்தன் பஃறுளி

யாறு கடல் கொள்ளப்படு முன் இருந்தோனாகலின் மிகு தொன்மைக் காலத்தினனாவன்; அவனைப் பாடிய ஒரு புலவர் "நின்குடையானது முனிவர்களாற் பரவப்படும் முக்கட் செல்வர் கோயிலை வலஞ் செய்தற்கண் தாழக்கடவது" என்று கூறுவாராயினர். செங்குட்டுவன் என்னும் சேரர் பெருவேந்தன் சிவபிரான் அருளாற் பிறந்தவன் என்றும், சிவபெருமானையே முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடுவோன் என்றும் சிலப்பதிகாரம் விளங்க வுரைக்கின்றது. சோழர்குல முன்னோரான மனு, முசுகுந்தன் முதலானவர்கள் சிவபத்தி மிக்கோரெனப் புராணங்கள் கூறுகின்றன. கரிகாலன், கோச்செங் கண்ணார் என்பவர்கள் பற்பல சிவாலயத் திருப்பணிகள் செய்த சிவனடியார்களென்பது வெளிப்படை. இங்ஙனமாகத் தமிழகத்திலே பண்டு தொட்டுச் செங்கோ லோச்சி வந்த முடியுடை வேந்தர் மூவரும் வழி வழியாகச் சிவபெருமானை வழிபடும் சைவ ரென்பது பெறப்படவே, அவராட்சியுட் பொருந்திய தமிழகத்திலே தலை சிறந்து நிலவிய சமயம் சைவமென்பதும் பெறப்படும்.

தொகையிலும், கீழ்க்கணக்கிலும், சிலப்பதிகாரம் முதலியவற்றிலும் சிவபிரான், செவ்வேள், பலராமன், கண்ணன் என்னும் நான்கு தேவர்கள் சேரவெடுத்துக் கூறப்படுகின்றனர். காவிரிப்பூம்பட்டினத்திலும், மதுரையிலும், இந்நால்வர்க்கும் கோயில்களிருந்தமை சிலப்பதிகாரத்தால் அறியப்படுகின்றது. இவற்றிலிருந்து இந்நான்கு தேவர்களையும் தமிழ் மக்கள் சிறப்பாக வழிபட்டு வந்தனரென்பது பெறப்படும். அங்ஙனமாயினும் அவர்கள் சிவபெருமானையே முழு முதற் கடவுளாகக் கொண்டன ரென்பதில் எத்துணையும் ஐயமில்லை. நால்வரையும் ஒருங்கெடுத்துக் கூறுமிடங்களில் பின் மூவரையும் வெவ்வேறு முறையாகவும் கூறிவந்த ஆசிரியன்மா ரனைவரும் சிவபிரானை மாத்திரம் யாண்டும் முதற்கண் வைத்துக் கூறுவது அவர்கள் கொள்கையை நன்கு புலப்படுத்துகின்றது.

"பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீலமேனி நெடியோன் கோயிலும்"

என்னும் சிலப்பதிகார அடிகளோடு பிறாண்டு இங்ஙனம் வருவன வற்றை ஒத்து நோக்கி இவ்வுண்மையை உணர்க. இங்கெடுத்துக் காட்டிய மேற்கோளில் ஆனேறு, மழுப்படை, முக்கண் முதலிய அடையாளங்களையாவது, நிறத்தையாவது, வேறு பெயரையாவது கொண்டு சிவபிரானைக் குறியாமல் "பிறவாயாக்கைப் பெரியோன்" என்னும் தொடராற் குறித்திருத்தலொன்றே சிவபெருமான் ஒருவரே பிறப்பில்லாத முதற்கடவுளாவ ரென்னும் உண்மையை நன்கு வலியுறுத்துதல் காண்க. வேறொரு தெய்வம் பிறப்பில் லாதா யிருப்பின் 'பிறவாயாக்கைப் பெரியோன்' என்னுந் தொடர் சிவபெருமானுக்கே செல்வதாகாது. அங்ஙனம் இன்மையினாற் றான் அது சிவனைக் குறிப்பதாயிற் றென்க. இங்ஙனம் சிவபிரானுக் குப் பிறவாமையைச் சிறப்பியல்பாகக் கிளந்தெடுத்தோதிய ஆசிரியர் இளங்கோவடிகள் மற்றோரிடத்து இறவாமையைச் சிறப்பியல் பாகக் கூறியிருப்பதும் கண்டு மகிழ்தற்குரியது. சிவசத்தியாகிய கொற்றவையைப் பரவுதல் கூறுமிடத்து,

> "விண்ணோ ரமுதுண்டுஞ் சாவ ஒருவரும்
> உண்ணாத நஞ்சுண் டிருந்தருள் செய்குவாய்"

என இறைவன் செயலை ஏற்றிக் கூறினமை காண்க. இறப்பினைத் தவிர்க்கும் அமிழ் துண்டும் ஏனைத் தேவரெல்லாம் இறவாநிற்க, இறப்பினைச் செய்யும் நஞ்சினையுண்டும் இறைவன் இறவாதிருந்து யாவர்க்கும் அருள் செய்குவன் எனக் கூறியிருக்கும் அருமைப் பாட்டை எங்ஙனம் பாராட்ட வல்லேம்! இவ்வாற்றால் பிறவாமை யும் இறவாமையும் ஆகிய கடவுட்டன்மையுடைய முதற்பொருள் சிவபெருமானே என்னும் உண்மை யாதொரு தடையுமின்றிச் சங்க காலத்து நன்மக்க ளுள்ளத்தே நிலவியதென்பது போதரும்.

> "நீரும் நிலனும் தீயும் வளியும்
> ஆக விசும்போ டைந்துட னியற்றிய
> மழுவாள் நெடியோன் தலைவ னாக
> மாசற விளங்கிய யாக்கையர்"

என மாங்குடி மருதனார் மதுரைக்காஞ்சியிலும்,

"நுதல்விழி நாட்டத் திறையோன் முதலாப்
பதிவாழ் சதுக்கத்துத் தெய்வமீ ருக"

எனக் கூலவாணிகன் சாத்தனார் மணிமேகலையிலும் சிவபெருமானையே கடவுளரில் முதல்வராக வைத்துக் கூறியிருத்தலும் காண்க. இதுகாறும் கூறியனவெல்லாம் ஒரு சமயத்தை உயர்த்திப் பேசுங் கருத்துடன் எழுந்தன வல்ல என்பதும், தமிழகத்தின் பழைய வரலாற்றுண்மையை விளக்கவே போந்தனவென்பதும் நல்லறிவுடையார்க்கு இனிது விளங்கா நிற்கும். சமண பௌத்தர் உள்ளிட்ட அனைவரும் இவ்வரலாற் றுண்மையை மறுக்காது ஒத்தொழுகி வந்தமையாற்றான் சங்க காலத்திலே சமயப்பூசல் சிறிதும் இல்லாதிருந்தது. பல சமயத்தினரும் நேர்மையுடன் கலந்து வாழ்ந்து வந்தனர். பிற்றை நாளிலே பிற சமயத்தினர் பழைய உண்மைக்கு மாறாகத் தாம் தாம் கருதியவாறெல்லாம் உரைக்கவே சமயப்பூசல் மிகுவதாயிற்றென்க,

இனி, மணிமேகலை, சமயக்கணக்கர்தந் திறங்கேட்ட காதையில், சைவவாதி கூற்றாகவுள்ள,

"இருசுட ரோடிய மானனைம் பூதமென்
றெட்டு வகையு முயிரும் யாக்கையுமாய்க்
கட்டி நிற்போனுங் கலையுருவி னோனும்
படைத்து விளையாடும் பண்பி னோனும்
துடைத்துத் துயர்தீர் தோற்றத் தோனும்
தன்னில் வேறு தானொன் றிலோனும்
அன்னோ னிறைவ னாகுமென் றுரைத்தனன்"

என்னும் பகுதியில் இறைவன் அட்ட மூர்த்தியாதலும், முத்தொழிற்கும் முதல்வனாதலும், எங்கும் நிறைந்தவனாதலும் முதலிய சைவ சித்தாந்தக் கருத்துக்கள் தெளிவாகக் காணப்படுதலின் சங்க காலத்தில் சைவ தத்துவங்களும், கொள்கைகளும் நன்கு உருப்பெற்றிருந்தன வென்பதும் பெறப்படும்.

திருமுருகாற்றுப்படை விளக்கம்

(இதன் உரிமை ஆக்கியோற் குரியது)

[திரு. அ. நடராஜபிள்ளையவர்கள்]

(நச்சினார்க்கினியர் போக்கின்படி யுரைநடை)

(௧௨அ-ம் பக்கத் தொடர்ச்சி)

(௩) திருவாவினன்குடி

அன்பனே! எம்பெருமானைச் செந்தூர்த் திருப்பதியிற் காணு விட்டால், யாவராலும் புகழப்படும் மூவர்களில் அரி, அரனாகிய விருவரும் தாமிழந்த தலைமையைப் பெறவேண்டியும், தன் வினைப் பயனாற் பூவுலகிற் புகுந்து துன்புறும் நான்முகனை நன்னிலையடை யும்படி செய்யக் கருதியும் இந்திரன் முப்பத்து மூன்று தேவர், பதினெண்கணங்களாகியோர் விண்மீன்கள் பொலிவுடன் விளங்கினு லொத்த காட்சியினையும், அம்மீன்கள் திரிகின்ற வெளியிலே காற்று னது புகுந்து புறப்பட்டாற்போன்ற செலவினையும், அக்காற்றோடு கூடிய நெருப்புப் பற்றினு லனைய வலியினையும், அந்நெருப்பினைக் கக்கிக்கொண்டு முழங்கு மிடியை நிகர்த்த குரலினையுங் கொண் டவராய் வானிலே சுழன்று திரண்டு தம்முடன் வர, தமது படைத்தல், காத்தல், அழித்தலென்னு முத்தொழில்களைப் பண்டு போற் பெறவேண்டியதாய குறையினைப் பெருமான் பக்கல் தெரி வித்துக் கொள்வதற்காக, கந்தர்வர்களை அவர்களது கந்தர்வப் பெண்களோடு யாதொரு குற்றமும் புகாதபடி தெளிவாக யாழின் இனிய நரம்புகளைத் தொட்டு வாசிக்கச் செய்துகொண்டு, அன் புருவாய முனிவர்களை யருள்வடிவாய முருகப்பிரான் முன்னே சென்று காணச்செய்து, பின் தாம் வந்து காணும்படியாக, அருட் கற்பினைக் கொண்ட தெய்வயானையாருடன் பழனிப் பதியிலே அப் பிரான் சில நாட்கள் எழுந்தருளி யிருத்தலுங் கூடும்.

நான்முகன் வினைப்பயன் யாதெனில், முருகப்பிரான் அசு ரரை யழித்துத் தேவரைக் காத்தபோது; இந்திரன் தன் மகள் தெய்வயானையாரை அப்பெருமாற்குத் திருமணஞ் செய்துகொடுத்த

விடத்தே, செவ்வேள் தமது கையிலுள்ள வேலைச் சுட்டி, "நமக் கெல்லாந் தந்தது இவ்வேல்" என்று கூறினன். அருகிருந்த அயன், "இவ்வேலிற் கிந்நிலைமைக் கொடுத்தது யானன்றோ?" எனப் புகன்றனன். பெருமான் "நங் கையிலுள்ள வேலுக்கு நீ கொடுக் குந் தன்மையொன் றுண்டோ ?" என வினவி, "இங்ஙனங் கூறிய நீ மண்ணிடைச் சென்று வருந்துக," என்று கட்டளையிட் டனுப்பி னன். இதுவே யன்னான் வினைப்பயனும். அதனால் நான்முகற்குப் படைத்தற் றொழில் தவிர்ந்தது. தவிரவே, மற்றையிருவர்க்கும் மற்றிரு தொழில்களுஞ் செவ்வனே நிகழாவாயின.

அவ்விருவரில், அரி எப்படிப்பட்டவனெனிலோ, இந்திரன், இயமன், வருணன், சோமன் என்னும் நான்கு பெரிய தெய்வங்களை யுடைய சிறந்த வூர்களைக் கொண்ட இவ்வுலகத்தைக் காத்தலாகிய வொப்பற்ற தொழிலைக் கைக்கொண்டவனும். அவனுடைய நீண்ட கொடியோ நஞ்சு பொருந்திய வுட்டுளையும் வெண்மையுங்கொண்ட காளி, களாத்திரி, யமன், யமதூதி யென்னும் பற்களையும், நெருப் பினைப்போன்ற பெருமூச்சாகிய காற்றினையும், காண்பார்க்கு அச் சத்தினைக் கொடுக்குந் தோற்றத்தினையும், மிகுந்த வலியினையுங் கொண்ட பாம்புகளை யறைந்து கொல்லும்படியான பல வரிக ளோடு கூடிய வளைந்த சிறகினையுடைய கருடக் கொடியாம்.

அரன் எப்படிப்பட்டவனெனிலோ, வெற்றி நிறைந்த போர்க் களத்தில் வெண்மையான காளையினைக் கொடியாகக் கொண்டவன். இறைவி அவன திடப்பாகத்தே விளங்கிக்கொண்டிருப்பள். அவன் பலரும் மெச்சுகின்ற வலிய தோள்களையும், இமையாத மூன்று கண்களையும், முப்புரத்தை யெரித்த முரணினையுங் கொண்ட உருத் திரமூர்த்தியாவன்.

அவ்விருவருடன் சென்ற விந்திரனோ, ஆயிரங்கண்களையும், நூறு வேள்விகளைச் செய்து முடித்துப் பகைவரை வென்ற கொற் றத்தினையுங் கொண்டவன். நான்கு கொம்புகளையும், நல்ல நடை யினையும், நிலத்தின்வரை படிந்து கிடக்கின்ற துதிக்கையினையு முடைய சிறந்த வெள்ளையானையின் பிடரியிலே தங்கி விளங்கா நின்ற பெருமையு மவனுக்குண்டு.

முப்பத்து மூவரென்பார் ஆதித்தர், உருத்திரர், வசுக்கள், மருத்துவர் என நான்கு வகையினராய், பிரித்துப் பார்க்குமிடத்தும் பன்னிரண்டாதித்தர், பதினொரு ருத்திரர், எட்டு வசுக்கள், இரண்டு மருத்துவரென விரிக்கப் பெறுவர்.

பதினெண் கணங்களென்பார் உயர் நிலையைப் பெற்றவர்களாகிய தேவர், அசுரர், தைத்தியர், கருடர், கின்னரர், கிம்புருடர், இயக்கர், விஞ்சையர், இராக்கதர், கந்தருவர், சித்தர், சாரணர், பூதர், பைசாசர், உருத்திரர், நாகர், ஆகாயவாசிகள், போகபூமியோர் எனப்படுவர்.

யாழ் வாசிக்கும் கந்தர்வர்களோ, புகையைக் கையால் முகந்தெடுத்தாற் போன்று நுட்பமாகிய தெய்வத்தன்மையால் அழுக்கேறாத தூயவுடையினையும், அரும்புவாய் விரிந்த மலர்களாற் கட்டப்பட்ட தார்கள் நிறைந்த மார்பினையும், கூரிய செவியினாலே வோசையை யளந்து நரம்பைக் கட்டின வார்க்கட்டையுடைய நல்ல யாழினது இசையிலே பழகினதாலுண்டாகிய இரக்கமுடைய நெஞ்சுடன் மெல்லிய மொழிகளை யெக்காலும் வழங்குதலையுமுடையவர்களாம்.

அக் கந்தர்வப் பெண்களோ, மக்கட்குரிய நோய்கள் பொருந்தியறியாத வுடலினையும், மாந்தளிரை யொத்த மேனியி (நிறத்தி)னையும், வெளிப்படுந்தோறும் உரை கல்லிற் பொன்னை யுரைத்துப் பார்த்தா லொத்து விளங்குந் தேமலையும், கண்ணுக்கினிய வொளி கொண்ட பதினெண் கோவையாகிய மேகலை யணிந்து தாழவேண்டியவிடந் தாழ்ந்தும், உயரவேண்டிய விடம் உயர்ந்தும் விளங்குகின்ற அரையினையும் பெற்றவராவர்.

முன்னே சென்று புகு முனிவர்களோ, மரவுரியாகிய வுடையினையுடையவராவர். அழகிய வலம்புரிச் சங்கினை வடிவாலும் நிறத்தாலு மொத்திருக்கும்படியான வெளுத்து நரைத்து முடியிட்ட குடுமி அவர்கட்குண்டு. நீராட்டத்தால் அழுக்ககன்று விளங்கும் வடிவினை யவருடையர். அவர் யாக்கை, நோன்புப் பட்டினியால் தசைகெடுகின்ற மார்பிலே யெலும்புக்கூடுகள் வெளிப்பட்டுலவுந் தன்மையையுடையது. எப்பொருளு நுகர்தற்குரிய பகற்பொழுது

கள் பலவு முண்ணுதே கழித்த வுணவினையுடையாரவர்; பெரிதுங் கற்றுர் சிறிது மறியலாகாத வியல்பான வறிவினையுடையார்; பல வற்றையுங் கற்றுர்க்கு எல்லையாயமைந்த தலைமையர்; ஆசையொடு கொடிய சினத்தையும் விலக்கின பேரறிவாளர்; நோன்பான் வரு முடற்றுயரினைச் சிறிதும் பொருட் படுத்தாத பொறுமையர்; வெறுப்பு விருப்பற்ற மேன்மையினையுங் கொண்டவர்.

உண்மை காணல்

[திரு. அ. சிதம்பரநாதனவர்கள், B. A.]

(௧௪௩-ம் பக்கத் தொடர்ச்சி)

இனி, விலங்கினங்களினிட மிருந்து நாம் அறியற்பாலன சில வற்றை நோக்குவோம். பசிப்பிணியால் வாட்டமுறினுங் கோளறி புல்லைத் தின்னுததுபோல நாமும் பசியாற் பீடிக்கப்படினும் ஒவ்வாதவற்றைச் செய்யலாகாது. யானை அம்பாலெய்யப்பட்ட விடத்தும் அஞ்சாது தன் பெருமையைக் காட்டுமாறுபோல நாமும் துன்புற்ற விடத்துந் தளராது நின்று நம் பெருமையைக் காட்டவேண்டும். மலையினுச்சியிலிருந்து யானை நழுவிவிழி னெழிந்துபோம். அதுபோல பெரியவரென்று சொல்லப்படுவோர் ஒழுக்கத்தினின்று வழுவி நடப்பின் பெருங்கேடுறுவர். ஆதலால் பெரியவர்க் கழகு அவர் நிலை வழுவாமையேயாம். யானை விழுங்கு மரிசியில் ஒரு கவளந் தப்பின், பல எறும்புகளுக் குணவாகும். அதுபோல பொருள் வல்லானுடைய பொருளிற் சிறிதெடுப்பினும் பலர்க்குப் பயன்படும். நூறு வயல்களில் நெல் விளைந்திருப்பினும் யானையை யங்குவிடின் நெல்லெல்லாம் மிதிக்கப்பட் டொருபொழுதி லழியும். வயல்களிலுள்ள நெல்லை யெடுத்துத் திரட்டி யானைக்குக் கொடுப்போமாயின், பல திங்களுக்காகும். அதுபோல மன்னவன் தன்னுட்களை யனுப்பிக் குடிகளை வருத்தாது கேட்கச் செயின், ஒழுங்காக வேண்டியவற்றைப் பெறுவன். யானையைப் போன்ற வலிமையுடையவனே ஆயினும் மன்னவன் தகாதவிடத்திற்குச் செல்வானேல் வெல்லப்படுவன். நன்னிலத்தில் வெல்லப்படாத யானை நரி

யால் காலாழ்களரின் வெல்லப்படுதல் போலவும், நெடும்புனலுள் வெல்லப்படாத முதலை நிலமிசை வெல்லப்படுதல் போலவும் அவனூட்டில் வெல்லப்படாத வேந்தன் வேற்றிடத்தில் வெல்லப்படுவான். ஆதலால் அவனிடனறிந்து போர் கொள்ளவேண்டுமென்ப. கொடிய காட்டில் மரங்களுஞ் செடிகளுங் கொடிகளும் அழிந்து போகுமாறு வெயில் காயவும் தான் அவ்வெயிலில் நின்றுகொண்டு தன்னிழலில் தன்னிளம்பிணையை நிறுத்திக் காக்குங் கலைமான்போல் தான் வருத்தமுற நேரினும் தன் மனைவி மக்களை ஒவ்வொருவருங் காப்பாராக. கவரிமான் தன் மயிர்த் திரள்களுளொரு மயிரை யிழக்கினும் வாழாது இறந்துவிடுதல்போல பெரியோர் மானங்கெடவரின் உயிர் நீப்பர். ஆதலால் ஒவ்வொருவரும் பெரியாரது மானங்கெடாது காக்கவேண்டும்.

இங்குள்ள பசுக்களெல்லாம் பலவேறு நிறமு முருவமுமுடையனவாயினும் அவை கறக்கும் பாலெல்லாம் வெண்மை நிறமாகவே இருப்பதுபோல மதங்களெல்லாம் வெவ்வேறு கொள்கைகளை யுடையவையாய்க் காணப்படினும் அவற்றில் வரும் பயன் ஒரு தன்மைத்தே யாகலான் எம்மதத்தையும் நம் மதமல்லவே என்று நினைத்திகழலாகாது. பாலினுள் நெய் மறைந்திருத்தல் போலவும், எள்ளினுளெண்ணெய் இருப்பது போலவும், கடவுள் எப்பொருளினும் மறைந்திருக்கின்றார். பல பசுக்களினிடையே அவிழ்த்து விடப்பட்ட பசுங்கன்று எவ்வாறு தன்றாயையே தேடியடைகின்றதோ அவ்வாறே ஊழ்வினைப் பயனும் வினை செய்தவனையே சென்றடையும். நெல் விதைத்தவர் நெல்லே பெறுமாறு போலவும், நம் நிழல் எவ்வளவு தொலைவு சென்றாலும் நம்மையே தொடர்ந்துவந்து நமதடியினிடத்தே தங்குவதுபோலவும், நல்வினை செய்தவர் நன்மையே யடைதலும், தீவினை செய்தவர் தீமையே யடைதலு மொருதலையாதலால் ஒவ்வொருவரும் எஞ்ஞான்றுமெவ்வாற்றானுந் தீவினை யகற்றி நல்வினை செய்யவேண்டும்.

நாய் நம்மைக் கடித்தாலும் அதை நாம் மீண்டுங் கடித்தவில்லைபோல பிறர் நமக்கின்னா செயினும் அவர்க்கின்னாதவற்றைச் செய்யாது விடவேண்டும், பிறர் இன்னா செய்து விடுவரெனவஞ்சித்

தனது தலையையும் நான்கு கால்களையும் உள்ளடக்குமாமைபோல் பிறவிப் பெருங்கேடுறுமேயென வஞ்சி துறவோர் மெய், வாய், கண், மூக்கு, செவியாகிய ஐம்புலன்களையும் அடக்கி நிற்பரெனக் கொள்க. இல்லற நடாத்துங் காதலனுங் காதலியும் காகத் திரு கண்ணிற் கொன்றே மணிபோல ஈருடலுக் கொன்றே யுயிரா யிருந்து வாழக்கடவர். காகங்கள் "எங்களையும் மற்றவரையுங் காப்பாற்றுங்கள்" என்பதாகக் குறிப்பிட்டு "கா ! கா !!" எனக் கத்துகின்றன. காகங்கள் இரை கண்ட விடத்து மறைக்காது தம்மினத்தைக் கூவி யழைத்துண்பதுபோல ஒருவர் பொருள் பெற்றுழி அவர் துய்த்தலே போன்று பிறமக்களையுந் துய்ப்பிப்பா ராயின், அறனும் பொருளு மின்பமும் பெறுவர். இம்மூன்றையு மன்றி வீடுபேற்றுக்கு முரியராவர். முட்டைக்குள்ளிருந்த குஞ்சு பறந்துபோமாயின், முன்பு நெடுநாள் தானிருந்த முட்டைக்குள் மீட்டும் அது செல்லாததுபோல நெடுநாளாக நமதுடம்பிலிருந்து வருமுயிர் போமாயின்,உடல் தனித்துக் கிடக்க வேண்டுமேயொழிய உயிர் மீண்டுமதனுட் புகாதாகலின் ஒவ்வொருவரும் உடலுமுயிரு மொன்றியிருக்குங் காலத்திலேயே பொன்றுங்காற் பொன்றாத் துணையாகிய அறஞ்செய்துய்யும் பொருட்டு இறைவனருளை நாடி நிற்பாராக. ஏனைப்பொருள்களும் இதுபோன்ற உண்மைகளை யுணர்த்துவதையுங் கண்டுகொள்வாராக!

புகழேந்தி - செந்தமிழ் நாடகம்

(இதன் உரிமை ஆக்கியோற் குரியது)

[திரு. அ. நடராஜ பிள்ளையவர்கள்]

(உ௫௫-ம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டாவதங்கம் - நான்காங் காட்சி

இடம்:—சோணாட்டுச் சிறைக்கூடத்தி னெருசார்

காலம்:—மாலை; **நடர்** - புகழேந்தி, மணிவண்ணன்

(நிலைமண்டில வாசிரியப்பா)

புகழேந்தி :—(ஒரு பக்க மமர்ந்துகொண்டு)

வகுத்தான் வகுத்த வகையலாற் கோடி

தொகுத்தார் தமக்குந் துய்த்த லரிதெனும்
பொய்யா மொழியினைப் புகரி றுறவியு
மெய்யாக் கொண்டிடல் விதியெனிற் சிறியேன்
கையா றுறுவது கழிபெரு மடமையாம்
அன்றியு மிறைவ னழகுற நடத்து
மின்றிகழ் செயலெலாம் விளங்கிடும் பல்லுயிர்க்
குறுதி பயப்பன வன்றியோ ரணுவு
மிறுதி யளிப்ப தில்லையே சிலசெயல்
வீணென மதிப்பதும் வெளிறுடை யறிவே
பேணிய மெய்யறி வாகுங் காட்சியைப்
பெற்றோர்க் கனைத்தும் பெரும்பய னுற்றே
விளங்கிடும்.—

மணிவணன்:—(தோன்றி வணங்கிக்கொண்டே)

செந்தமிழ் வியன்பெருஞ் செல்வி
களங்கொளுங் கலித்தொகை நற்றிணை யகம்புற
நானூ றும்முத னற்றமிழ்ச் சங்கப்
பேழையி லுற்ற பெரும்பணி யாவையு
நாவாங் கைகளா னலமுற வெடுத்துப்
பூவாம் பெரியதோர் பொருட்காட்சி நிலையில்
வைத்து மகிழ்ந்திடும் வித்தகப் பெரியீர் !
'வாழ்க ! நீடு வாழ்க ! எனவிறை
சூழ்கழ றொழுதனன்; சுகமே போலும்;
குறைவெது முண்டோ ? குறுமுனி யனையீர் !

புகழேந்தி:—அறிவாற் பெரியீர் ! உறுகுறை யாதும்
பெறுமா றில்லை. பெயரள வன்றிச்
செயலா லரண்மனைத் தோற்றமாச் சிறக்கு
முயலினைக் கொண்டதிவ் வொருபெருஞ் சிறையே.

மணிவணன்:—ஆயின், எங்கணு மறியொணு வியப்பே.!
தாயினு மன்புடன் றையலார் வளர்க்குங்
கிள்ளைகள் கூட்டினைச் சள்ளையில் வையக
மென்றது போலா மிரும்பூ தாமே.

புகழேந்தி:—'கலக்கம் பிட்டுக் காடையை வளர்க்கினுங்
கலக்கமு ணெஞ்சங் காட்டினில் வைகும்'
என்பது வாய்மையே. ஆயினும் இச்சிறை
மன்பதைக் குரிய வல்லோன் கட்டளைப்
படியே வொட்டக் கூத்தப் பட்டனின்
கொடிதா நெஞ்சக் கோட்டையை யிடிக்க
வேண்டுங் கருவிகள் விளங்கிட வேண்டிய
கொல்லுலைக் கூடமாய்க் குயிற்றிட வந்தனன்;
நல்லவர்க் குயிரையு நல்கிடு மணியே!
ஆகலின், இதுசிறை யன்றெனக் கருதுவீர்.

மணிவண்ணன்:—நெஞ்சக் கோட்டையா! யாதது? பெரியீர்.

புகழேந்தி:—பஞ்சக் கொடுமையாற் கஞ்சியை வேண்டி
நயமொழி பகர்ந்தே யிரந்திட, 'நயமிலாப்
போலிப் புலவர் சிறையகம் புக,'எனக்
கோலிச் செலுத்தக் குறையறு மெழுவர்
வந்திவண் சேர்ந்தார்; மாண்புடை மக்கள்!
நொந்திடு மவரை நுவன்ற வெண்மதியன்
கல்விச் செருக்காற் காளியின் றிருமுன்
கொல்வித் திடவே குறித்துளான் போலும்
இக்கொலை நவராத் திரிவிழா வன்றும்.
தக்கோ ரவரை யதன்முனந் தகுங்கவி
மிக்கோ ராக்கி வீணை மட்டந்
தட்டும் பணியே தாழ்சிறைக் கூடங்
கொட்டுங் கொல்லுலைக் கூடமாய் மாற்றிட
லானது,

மணிவண்ணன்:— ஓ! கோ! அழிப்பன்! பழியொடு
மானமில் புலவினை மாக்களிற் கொலைவினை
கொண்டனன் கொல்லோ! குவலய மதனிற்
கண்டிடும் பல்லுயிர் காட்சிசா லுடம்பிற்

பொருந்திடு மருமையும், புரையறு முதல்வன்
றிருந்திட வவற்றினைச் செலுத்து முறையும்,
மறத்தொழி லதனுன் மாற்றுமோ ருயிரை
யறத்தொழி லதனு னுக்கற் கியலா
மாந்தர் நிலைமையு மடயன் கற்ற
தீந்தமிழ் மொழியிற் றெரிந்திட விலையோ !
அரண்மனைத் தோற்றமா யமைந்தவிச் சிறையின்
பரண்மிரு கொல்லுலைக் கூடப் பண்பாய்
மாறிய தென்னே? வளர்கவிப் புலவீர் !

புகழேந்தி:—வீறுடை மன்னர்கள் மெச்சிடு மமைச்சே !
கோட்டை யரணும். அதனைக் கொல்லுங்
கூடம் மனையாம், ஆகலின் கூத்தன்
நெஞ்சக் கோட்டையை நீறதாப் போக்குந்
தஞ்சமா மிச்சிறை தருமரண் மனையாம்.

மணிவணன்:—செஞ்சொற் புலவீர் ! செப்பிய தொவ்வும்.
வஞ்சகன் கோட்டை மடிந்திட னலமே.

புகழேந்தி:—நலமொன் றேயோ ? நற்பே ருலகை
யாட்டு மலகையை யோட்டிய தாமே.
ஆகவே, நீவிர் அதற்கின்றி யமையாக்
கருவிக ளுதவக் காவற் றலைவனும்
பெரியோற் குணர்த்துதிர் பேரற மணியே !

மணிவணன்:—அங்ஙனஞ் செய்வல்; அகத்தியம் அரசனுந்
திங்களா றிற்குட் டிரும்புவன். அவன்முன்
கவிக்களிற் றினையே புவிக்களி றுக்கி
மாவுத்த னெருவனை மத்தகத் தேற்றிப்
பூவுல கறியப் பொன்னம் பாரிவைத்
துலாப்புறப் படுவம். "ஓங்குசீர் மிகுந்த
கலைமகள் வாழி ! கவின்புக ழேந்தி,"
என்றே வாழ்த்துவம்.

புகழேந்தி:— இறைவனி னருளா
னன்றே யாற்றுவம்; நானில மகிழ்வே

மணிவண்ணன்:—ஈவதை விலக்கி யிருஞ்சிறை யிட்டதுர்த்
தேவதை யாகிய கூத்தன் செயற்குக்
கூலியே கொடுப்பம் கொடுமையே! சிறையாம்
வேலியிற் பட்ட மேதைக ளெழுவரும்
யாண்டுளர்? அவர்களைக் கண்டிட வேண்டினன்.

புகழேந்தி:—படுக்கை யறையிற் றுயின்றனர்; இடுக்கண்
மிகுதியும் பட்டனர் போலும் தகுதியா
முணவினைக் கண்டே நெடுநா ளொழிந்தன
எனநினைக் கின்றேன் எழுமின் சென்று
காண்குவம்; இரக்கக் காட்சி சிறக்கவே.

(இருவரும் போக)

(காட்சி முடிகிறது.)

பொருனை நாட்டுப் புலவர்கள்

[திரு. M. S. பூரணலிங்கம்பிள்ளை யவர்கள் B. A. L. T.]

(உஉஅ-ம் பக்கத் தொடர்ச்சி)

15. குமரகுருபர சுவாமிகள்

சீவைகுந்தம் என்னுந் திருப்பதியைச் சிறக்கச் செய்த புலவர் பெருமான் குமரகுருபர சுவாமிகள். இவர் இருந்த காலம் மதுரை மன்னன் திருமலை நாயக்கன் அரசு செலுத்திய பொழுதென்பர். இப்பெருமான் தருமபுர ஆதீனம் மாசிலாமணி ஞானசம்பந்தத் தம்பிரானை ஞானசிரியராகப் பெற்றனர். காசிமா நகரில் "பாட்சா"வுடன் கலந்து வாதில்வென்று காசி மடமொன்றைக் கட்டி வைத்தனர். சிறுவயதில் பேச்சற்றவராகத் தோன்றிப் பெற்றோர் தவ வலிமையால் பேசத் தொடங்கினரென்பு. 'கந்

தர் கலிவெண்பா' இவரால் ஆக்கப் பெற்ற முதனூல். 'மீனாட்சி பிள்ளைத் தமிழ்' என்ற நூல் பாடப்பெற் றிருந்ததைக் கேள்வி யுற்று மதுரை நாயக்கர் திருப்பரங்குன்றிற் கேகி இப்புலவர் பெரு மானைப் பல விருதுகளுடன் வரவேற்று மதுரைக்கு அழைத்துச் சென்று அந்நூலை அரங்கேற்றச் செய்து பல பரிசுகளை அளித்தன ராம். இவர் இயற்றிய ஏனைய நூல்களாவன:—பண்டார மும் மணிக்கோவை, சிதம்பர மும்மணிக்கோவை, சிதம்பரச் செய்யுட் கோவை. முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ், காசிக் கலம்பகம், நீதிநெறி விளக்கம். கடைசிநூல் சிறுவர்களுக்குப் பாடமாகும். பல ஒழுக்க நூல்களைப் பயின்றவரே இந்நூலின் பெருமையை அளக்க வல்லவராவர். 102-செய்யுளடங்கிய இந்நூலை ஸ்டோக்ஸ் துரை, அம்பலவாணக் கவிராயர், முத்துக்குமாரசாமிக் கவிராயர் இவர்களின் உதவிபெற்று ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தனர். இந்நூலுக்கு உரை செய்தவர் ராவ்பகதூர் தாமோதரம்பிள்ளை, காஞ்சிபுரம் சபாபதிமுதலியாராவர். அதற்கு விரிவுரை ஆக்கிய வர் முத்தையபிள்ளை யென்பவரே. இராஜகோபாலபிள்ளை முதல் ஐம்பது செய்யுளுக்கு மாத்திரம் பொருள் வரைந்தனர். பிள்ளைத் தமிழ், கலம்பகம் இவற்றின் பெருமையை விரிக்கிற் பெருகும்.

16. சுப்பிரமணிய வேதியர்

ஆழ்வார் திருநகரியில் 'பிரயோக விவேகம்' என்னும் நூலை ஆக்கிய புலவர் சுப்பிரமணிய வேதியர். இப்பெரிய நூலில் நான்கு காண்டங்களுள. காரக, சமரச, தத்தித, முதலிய படலங்களில் 51-கலித்துறையுள. இந்நூலுக்குத் தாமே உரையாக்கியுளார். இதன் பாயிரத்தில்,

> அன்றியும் தென்றிசை ஆழ்வார் திருநகர்
> அப்பதி வாழுஞ் சுப்பிர மணிய
> வேதியன் தமிழ்ப்பிர யோக விவேக
> மூதுரை யெழுதினன்'

என்று சுவாமிநாத தேசிகர் குறிப்பிட்டுளார், அந்நூலை "உம்பர்க் குரிய பிரயோக விவேக" மென்று புகழ்ந்துளார். இற்றைக்கு 170 ஆண்டுகட்கு முன்னர் இவர் இருந்தன ரென்ப.

17. நம்மாழ்வார்.

ஆழ்வார் திருநகரில் அந்நகருக்குப் பெயர் கொடுத்த பெருந் தவயோகியார் நம்மாழ்வாரெனப்படுவர். 12-நூற்றாண்டுகட்கு முன்னரே நம்முடைய ஆழ்வாரென்று திருமாலால் அழைக்கப்பெற்றுப் பிறப்பினுல் யோகியாயிருந்தவர். சடவாயுவை நிராகரித்துப் பிறந்தமையால் சடகோபரென்றும், மகிழம்பூமாலை தரித்தமையால் வகுளாபரணரென்றும், மாறன் அரசவழி பற்றியதனுல் காரிமாறன் என்றும், பராங்குசன் என்றும், திருவழுதி வளநாடனென்றும், சேனையர்கோன் என்றும் பல பெயர்கள் படைத்து வாழ்ந்தனர். இவர் இவ்வுலகில் தோன்றியது வைகாசி விசாகத் தன்று என்பர். இவரால் அருளப்பெற்ற 1102--செய்யுளடங்கிய 'திருவாய்மொழி' யும், 100-கொண்ட திருவிருத்தமும், 7-கொண்ட திருவாசிரியமும், 87-கொண்ட திருவந்தாதியும் முறையே சாமம், ரிக், யசுர் அதர்வண வேதப் பொருளைத் தருவனவாம். மொத்தஞ் செய்யுள் 1296. இவற்றைக் கற்கப் புகுவான் இராமன், கிருஷ்ணன் இவர்கள் வரலாறுகளை நன்கு கற்றுணரவேண்டும். மதுரகவியாழ்வார் இவரைப் பதினறும் வயதிற் கண்டபொழுது இவர் பேசாத யோகியா யிருந்தமை நோக்கிச் செத்தத்தின் (உடலின்) வயிற்றில் சிறியது (ஆன்மா) பிறந்தால் எத்தைத் (எதனை) தின்று எங்கு கிடக்குமென்று' வினவ, அதற்கு யோகி அத்தைத் (சுகதுக்கத்தை) தின்று அங்கே (சரீரத்திலே) கிடக்கும்' என்றன ரென்ப. வீடெய்தல் எங்ஙனமென்பதைப் பின்வருங் குறளடியால் நம்மாழ்வார் விளக்கியதை உணர்க.

'அற்றது பற்றெனில்
உற்றது வீடுயிர்
செற்றது மன்னுறில்
அற்றிறை பற்றே'.

18. வி. பி. சுப்பிரமணிய முதலியார்

வெள்ளக்கால் ராவ்சாகிப் வி. பி. சுப்பிரமணிய முதலியாரவர்கள் ஆங்கிலங் கற்று உழவு நூல் கால் நடை நூல் போன்ற

யல நூல்களையுங் கற்று 'வெற்றெரினெரி' சீனியர் அசிஸ்டெண்டா யிருந்தும் சம்பளம் பெற்று உடல் நலமும் ஊக்கமுங் பொருந்திய பெரியார் எழுபானிருமையராய் வாழ்ந்து வருகின்றனர். இவர் தந்தை ஆழ்வார் குறிச்சி பழனியப்ப முதலியாராவர். வெள்ளக் காலில் நிலப் பல முடையவர்; மில்ட னெனும் ஆங்கிலக் கவிவா ணன் செய்த சுவர்க்க நீக்கம் எனும் பெரும் காவியத்தின் முதற் காண்டத்தை ஆசிரியப் பாவில் தமிழில் மொழிபெயர்த்துளார். தம் முயற்சிக் கடுத்த 'கால் நடைப்' புத்தக மொன்றை உரை நடையில் உழவர்கட்கு இன்றியமையாத கால் நடைகளைப் பேணு முறையில் எடுத்தோதி யுள்ளார். கம்பராமாயணத்தில் மிக ஈடு பட்ட இப் புலவர் அகலிகையின் கற்புக்கதையை அருமையான வெண்பாவாக வரைந்துளார். விருத்தத்திற்கோ ருயர் கம்பனெ னப் பட்டமையால் இவரும், 'கோம்பி விருத்தம்' என்ற சிறு நூலையு மாக்கியுளார். நெல்லையம் பதியின ராதலின் 'நெல்லைச் சிலேடை வெண்பா' என்ற மற்றொரு சிறு நூலையுஞ் செய்துளார். வெண்பாவிற் புகழேந்தி என்ற ஆன்றோர் வாக்கிருப்பினும் நள வெண்பாவையும் புறங்காணத் தக்கது அகலிகை வெண்பா வெனலாம்.

19. கோனேரியப்பக் கவிராயர்.

ஆழ்வார் திருநகரியில் கோனேரியப்பக் கவிராயர் என்பவர் உபதேச காண்டம் எழுதியவர். இவருக்கு ஊர் காஞ்சி என்றும் இவர் கச்சியப்ப சிவாச்சாரியார் மாணவரென்றும் சொல்வர்.

20. காந்தியார்.

ஆழ்வார் திருநகரிக் கடுத்துள்ள தென் திருப்பேரி யென்ற ஊரில் காந்தியா ரென்ற மாதர்மணி பாவாக்குவதில் மிகத் திறமை யுற்றவளா யிருந்து சீவக சிந்தாமணி, பரிபாடல் ஆதிய பழைய நூல்களில் இடைச் செருகல்களாக அநேக செய்யுள்களை அமைத் துள ரென்று அறிகின்றோம். சிந்தாமணியில் மட்டுமே 400-செய் யுட்கு மேற்பட்டன இடைச் செருக லென்பர். தனி நூலாக ஒன்றும் இவ் வைணவக் காரிகையார் ஆக்கியதாகப் புலப்பட வில்லை.

21. காரியார்.

கொற்கையம்பதி வாழ்ந்த புலவர் கணிதத் துறையிற் றேர்ந் தவர். அவர் காரியார் எனப்படுவர்.

பன்னு வடசொற் பனுவல்தனை இப்போது
கன்னிதமிழ் வாயாற் கட்டுரைத்தேன்—முன்னம்
மகிழ்கின்ற வென்னின் வழிவந்த கணக்கெல்லாம்
இகழ்வின்றி யேயுரைப்பேன் யான்.

இவ்வருமையான கணித நூல் தமிழ் நாட்டில் முன்னர் வழங் கிற்று. இப்பொழுது யாழ்ப்பாணத்தார் அதனை நன்கு மதித்து வருகின்றன ரென்பர். ஒரு படி நெல்லில் 14000 நெல்லுள தென் றும், ஒரு படி அரிசியில் 38,800 அரிசியுள தென்றும் இத்தகைய நுட்பமான கணக்குகள் அதனி லுளதென்றும் தமிழ்ப் பள்ளியிற் படிக்குங்கால் அறிந்த துண்டு.

'நறுந்தொகை' பாடிய பாண்டியன் கொற்கையம் பதியில் வீற்றிருந்த குலசேகர னென்பான். நைடதம், கூர்ம புராணம், இலிங்க புராணம், காசி காண்டம் இவற்றின் ஆசிரியராகிய அதி வீரராம பாண்டியன் தென்காசி நகர் வாசியா யிருந்தனன்.

22. பசலையார்.

கொற்கையம் பதியி னருகிலுள்ள நாடு மாறோக்க மென்றும் மாறோக மென்றும் பெயர்பெற்றிருந்தது. அதில் பசலையாரென்ற பெயரால் புதுமைவாய்ந்த மாதரசி யிருந்ததாகத் தெரிகின்றது, இம்மாது ஊர்ப் பெயருடன் மாறோக நப்பசலையா ரெனப்படுவர். ஏனெனில் போந்தைப் பசலையார் (அகம் 110) குமிழிஞாழலா ணப்பசலையார் (அகம் 160) காமக்கணிப் பசலையார் (நற்றிணை 243) என்ற பலிருந்தனர். மாறோகத்து நப்பசலையார் நற்றிணை 304-ல் கூறியதை ஆராயின் பசலையா ரென்பது காரணப் பெயரா யிருக் கலாமென்றெண்ண விடமுள்ளது.

"புணரிற் புணருமா றெழிலே பிரியின்
மணிமிடை பொன்னின் மாமை சாயவெ
னணிநலஞ் சிதைக்குமார் பசலை"

23. கடிகைமுத்துப் புலவர்.

திருநெல்வேலிச் சீமையில் பெரிய பாளையப்பட்டு எட்டைய புரம். இதனை (1705—1725) யாண்ட பாளையக்காரர் செகவீர ராம வெங்கிடேசுர எட்டப்ப நாய்க்கர். இவருடைய வாசற் புல வரா யிருந்தவர் பலரில் கடிகை முத்துப் புலவர் புகழ் பெற்றவர். இவராக்கிய நூல்களனைத்திலும் அலங்காரங்கள் வருணனைகள் மிகுந்துள. 'கழிக்கரைப் புலம்பல் அல்லது சமுத்திர விலாசம்' என்ற நூலில் அரசனைக் கடலுடன் ஒப்புமைப் படுத்திச் சிலேடை மடக்கு முதலியனவற்றால் விளக்கி யுளார். இதில் காசியினின்று குருட்டுப் பார்ப்பான் ஒருவன் செந்திலுக்குச் சென்று செந்தில் நாயகனை வணங்க ஒரு கண்ணைப் பெற்றானென்றும், செந்திற் கடவுள் ஏவலால் எட்டப்பனைப் பார்க்கவும் மற்றொரு கண்ணைப் பெற்றன னென்றும் ஒரு கதை காணப்படும். 'திக்கு விசயம்' என்ற நூலில் 320 செய்யுளுள. அது சிவகிரி வரகுண ராம வன் னியனுடைய செல்வம், சிறப்பு, பராக்கிரமம் முதலான குண வியப் பை விளக்கும். ஊற்றுமலை மருதப்பத்தேவர் பேரில் 'மதன வித் தார மாலை' ஒன்றைச் செய்தனர். எட்டப்பன் பேரில் 'சாமரச மஞ் சரி' என்ற மஞ்சரி யொன்றும் ஆக்கியுளர். இப்புலவர் தம் மர ணத் தருவாயில் பிள்ளைகள் வருத்த முற்ற பொழுது 'ஒ ரப்பன் போனால் எட்டப்பன் இருக்கிறான்' என்று மனவமைதி செய்வித் தனராம். 'கடிகை' யென்பது குடித்தலைமைப் பெயரென்பர். திருவிடைமருதூ ரந்தாதி யென்பதையும் இவரே ஆக்கின ரென் பாரு முளர்.

24. கடிகை நமச்சிவாயப் புலவர்.

பர்த்துரு ஹரி என்ற நூலைத் தமிழில் மொழிபெயர்த்த கடிகை நமச்சிவாயப் புலவர் இவர் வழிவந்தவராம். சீராப் புராண மாக்கிய உமறுப் புலவர் இவரது நன் மாணாக்கராம். கடிகை முத்துப் புலவர் காலத்தவரும் எட்டயபுர வாசல் வித்வானில் ஒரு வருமாகிய நாகூர் முத்துப் புலவர், வெங்கடேசுவர எட்டப்ப மன்னனை 151 செய்யுளிற் பலதிறப்படப் புகழ்ந்துளார்.

25. வீரபாண்டியப் புலவர்.

தூத்துக் குடியில் கத்தோலிக் சீமான் கேபிரீல் பெல்டோனுவாலும், பாஞ்சாலங் குறிச்சிப் பாளையத்திற் கதிபதி யாகிய கட்டப் பொம்ம நாயக்கராலும் பாதுகாக்கப் பெற்றவர் வீரபாண்டியப் புலவராவர். பிறப்பிற் பாணர் தையற்காரர் இருவர் பேரினுஞ் சில பிரபந்தங்கள் பாடி யுளர். 'ஓய் ஓய் புலவரே, தையல் நல்ல தையல், பார்த்தீரா' வென்று யாதவ குலக் கவிவாணர் சதுராடிய தாசியைக் கண்ணுற்றுப் பகடிப் பேச்சுப் பேசின அமயம் 'ஆட்டுக்குத் திறமான தைப' லென்று மறு மொழி யளித்து அவர் வாயை அடக்கின ரென்று கூறுவாரு முளர்.

26. சங்கர மூர்த்திக் கவிராயர்.

இராச பாளையத்தில் கார்காத்த வேளாளர் குலத்திற் பிறந்து சிவஞான யோகிகளிடங் கல்வி கற்றுத் தேர்ந்து கன்னி வாடி பாளையக்காரர் மீது 'கோவை' பாடி யானைக் கன்றும், வளமான நன்செய் நிலங்களும் பெற்றவர் சங்கர மூர்த்திக் கவிராய ரென்பார்: சேற்றூர்ப் பாளையக்காரர் பேரில் 'பள்ளுப் பிரபந்தம்' பாடியவரும் அவரே. இப் பள்ளில் தம் வரலாறுகளிற் சிலவற்றை யமைத்துளார். இவர் கன்னிவாடி, சிவகிரி யாதிய குறுநில மன்னரால் போற்றப் பெற்றவர்.

27. ஆண்டான் கவிராயர்.

'வசை கவி' என்று பட்டம் பெற்ற ஆண்டான் கவிராயர் என்பார் ஒட்டப் பிடாரத்தில் ஒரு வைணவப் பார்ப்பன ரென்பர். 120 ஆண்டுகட்கு முன்னிருந்தவர். 'ஆற்றோடே போனாலும் ஆற்றாரோடே போகாதே' என்று ஆற்றாரைப் பழித்தன ரென்ற வசைக்கூற்று இன்றும் நிலவுகின்றது. இவருடைய வசைகவி மாதிரிக் கொன்று இவண் வருவது.

"வாயெரியக் கையெரிய வயிறெரியச் சட்டிவைத்து வறுத்துக் கொட்
காயெரியக் கடினமுட னரைவயிற்றுக் கன்னமிட்ட கடினக் காரி [டிக்
தாயெரிய மகளெரியச் சேஷியெனு மொட்டைமுண்டை தலைமேற் [பற்றித்
தீயெரியக் கண்டக்கா லென்னுடைய வயிற்றெரிச்சல் தீருந் தானே."

28. தண்டபாணி சுவாமிகள்.

இற்றைக்கு முப்பதாண்டுகளின் முன்னர் 1818-ல் இறையடி படிந்தவர். 1838-ல் திருநெல்வேலி வேளாண் மரபிற் பிறந்து சைவராகத் திருச்செந்தூர், பழனி, சென்னை யாதிய தலங்களில் வதிந்து திருவாமாத்தூரிற் றங்கி தண்டபாணி சுவாமிக ளென்றும், முருகதாச சுவாமிகளென்றும், திருப்புகழ்ச் சுவாமிகளென்றும் பெயர் பெற்றுப் பன்னூல்களை யாக்கிய பெரியவராயிருந்தனர். இவரால் ஆக்கப்பெற்ற நூல்களாவன:—தில்லைத் திருவாயிரம், திருவரங்கத் திருவாயிரம், பழனித் திருவாயிரம், தெய்வத் திருவாயிரம் திருவாமத்தூர்ப் புராணம், திருமயிலைக் கலம்பகம், சென்னைக் கலம்பகம், ஒலியலந்தாதி, புலவர் புராணம், திருச்செந்தூர்க் கோவை, அருணகிரி நாதர் புராணம், ஏழாயிரப் பிரபந்தம், ஏகபாதத் திதழகலந்தாதி, பதிகச் சதகம், சதகப் பதிகம், திருச்செந்தூர் திருப்புகழ், நான்கு நூல், அறுவகை யிலக்கணம் முதலியன. இப்புலவர் சந்த விருத்தப் பா எழுதுவதிற் கைதேர்ந்தவர். திருக்குருகூர் ஞானசித்த சுவாமிகள் இவருக்குச் சிறந்த நண்பர்.

மரகதகிரிக் கடவுள் மாமலர்த்தாட் கன்பாய்
சரதபத்தி யாப்பதிகஞ் சாற்றி—விரதபயன்
பெற்றுயர்ந்த ஞானசித்தன் பீடும் பெருந்தகவும்
கற்றுயர்ந்தோ ரேயறிவர் காண்.

புலவர் புராணத்தின் ஒரு பாகம் 1904-ல் பி. ஏ. த் தேர்வினுக்குப் பாடமாக அமைக்கப்பெற்றிருந்தது. முழு நூலையும் அவர் மகனார் அச்சிட்டுளர். இப்புராண நூற்பொருள் குறித்த பாட்டு இதுவாகும்.

'அகலமாகு மருந்தமி ழாக்கமுஞ்
சகலர்காணத் தகாவருட் டன்மையும்
பகலைநேர்புகழ்ப் பாவல ராண்மையும்
புகலுமிந்தப் புராண முணர்த்துமே.'

இதுகாறு மெடுத்துரைத்த புலவர்கள் முப்பதின்ம ராவர். சுருங்கக் கூறியும் அன்னாரொத்த புலவர் பலர் பெருமையை

எடுத்தாளக் கால மிலதாதலின் விடுத்துளேன். தருணம் வந்துழி இன்னும் பலர் புலமையை வியந்து பேசுவலேனும், நூற் செய்யுந் திறத்தினர் மேற் கூறிய புலவர் பெருமான்களின் யாப்புத் திறமையை மேற்கோள்களுடன் விரித்துரைக்குமாறு இறைவனை வழுத்துவன்.

ஆணும் பெண்ணும்*

[திரு. மு. போ. ஈசுரமூர்த்தியா பிள்ளையவர்கள்]

ஆண் தன்மை வீரத்திற் சிறந்தது; பெண் தன்மை அன்பிற் சிறந்தது.

ஆடவர் உடம்பு போருக்கும், பிழைப்புக்கு வேண்டும் பொருள் தேடுவதற்கும் பொருத்தமாக ஊக்கமும் உறுதியும் அமையப்பெற்றுள்ளது. பெண்பாலுடம்பு தன்னைப் பாது காக்கும் ஆடவருள்ளங் கவரும் அன்பும் அழகும் அமையப் பெற்றது.

பொதுவாக ஆண்மை எதிர்க்கும் இயல்பிற்று; பெண்மை பணியும் இயல்பிற்று. ஆண்மை வலியச் சண்டைக்குப் போவது; பெண்மை வந்த சண்டையைக் காப்பது. ஆடவர் உள்ளம் வன்மையா யிருக்கும், பெண்டிர் உள்ளம் இளக்கமா யிருக்கும். ஆண் பிள்ளைக்குத் துணிவு உண்டு; பெண் பிள்ளைக்கு உறுதி யுண்டு. ஆண் பிள்ளைக்கு எடுப்பு உண்டு; பெண் பிள்ளைக்கு அமைதி யுண்டு. ஆண் பிள்ளை ஆள்கின்றான்; பெண் பிள்ளை அன்பால் வயப்படுத்துகின்றாள்.

ஆண்மகன் சொற்களால் நயப்படுத்துகின்றான்; பெண் மகள் பார்வையாலும் இணக்கத்தாலும் நயப்படுத்துகின்றாள். ஆண் பிள்ளையின் சட்டங்களைப் பார்க்கிலும் பெண் பிள்ளை யின் பார்வை வலிமையுடையதாகும். ஆண் பிள்ளையின் வாதத்

---

* பெர்நார்டு ஆலண்டர் M. D. ஆங்கிலத்தில் எழுதியது.

தைப் பார்க்கிலும் பெண் பிள்ளையின் கண்ணீர் மிக்க வலி வுடையதாகும். (வழக்கு மன்றங்களிற் சான்று பகரச் செல் லும் பெண்கள் குறுக்குக் கேள்விகளால் மயங்குவதில்லை.)

முற்காலத்திற் பிள்ளைப்பேறு மிகுதியாக இருந்தமையாற் பெரும்பாலும் வீடு அடங்கி இருக்க வேண்டிய பெண்மை ஏற் பட்டது. பெண்பாலுக்குள்ள தாய்மையின் இயற்கைத் தன்மை யானது முற்றிலும் அடங்கி யிருத்தலையும், தன்னயம் மறுக் கும் ஊழியத்தையும் வேண்டற்பாலதா யிருக்கின்றது. ஆண் பிள்ளை பிறர் சார்பின்றி இருத்தல் கூடும். ஆனால் பெண் பிள்ளை அப்படி யிருக்க வொண்ணாது. அவள் தன் விருப்பத் தாலும் முயற்சியாலும் தன் சாயலில் மற்றோர் உயிரை உண் டாக்கிப் பாதுகாக்க வேண்டியவளாயிருக்கிறாள்.

பெண்கள் பிறர் உணர்ச்சியை உடனே அறிந்துகொள் வார்கள். ஈகை யியல்பு பெண் மக்களுக்கே சிறந்தது. இவர் கள் இன்பத்தையும் மிகுதியாய் நுகர்வார்கள். அப்படியே துன்பத்தையும் மிகுதியாய் ஏற்பார்கள். பெண்கள் பிறர் வருத்தத்தை விரைவில் அறிந்துகொள்வார்கள். அவர்கள் சிறிய குறிகளாற் பிறர் உள்ளத்திலிருப்பதைக் கண்டுகொள் வார்கள். ஒருவன் நலமாயிருக்கின்றானா நலமின்மையாயிருக் கின்றானா, மகிழ்ச்சியுட னிருக்கின்றானா, கவலையுட னிருக்கின் றானா, தோல்வியுற் றிருக்கின்றானா வெற்றியுற் றிருக்கின்றானா, இன்னுந் தன்னை விரும்புகின்றானா முதலியவற்றை யெல்லாம் முகப்பார்வையிலேயே தெரிந்துகொள்வார்கள். இப்படி உய்த்துணர்தலாகிய சிறந்த காட்சியும் மிகுந்த இரக்கமும் சேர்ந்துதான் பெண்களை வாடி வதங்கிய நோயாளிகளுக்குச் செவிலித்தாயாகும் நிலைக்கு ஆளாக்குகின்றது.

ஆண் பிள்ளைகளைப் பார்க்கிலும் பெண்கள் மிகுந்த ஆர்வ முடையவர்களாகவும், ஆழ்ந்த உணர்ச்சி யுடையவர்களாகவும் இருப்பதால் ஏற்பட்ட பழைய வழக்கங்களிற் பற்று விடாத வர்களாகவும், எதிலும் மாறுதலை விரும்பாதவர்களாகவும்

இருக்கின்றார்கள். அவர்கள் தங்கள் குடும்பத்தோடு வளர்ந்த எவரேனும் எதுவேனும் பிரிந்திருக்கப் பொறார். மேலும் பெண்கள் சமயக் கொள்கைகளில் மிகவும் அழுத்தமான நம்பிக்கை யுடையவர்களா யிருப்பார்கள்.

ஆடவர் நடத்துவர்; பெண்டிர் துணைசெய்வர்

பெண்கள் பொதுவாகத் துடுக்கான மாறுதல்களையும், புதிய விதிகளையும் சட்டங்களையும் வெறுப்பதுமன்றிச் சாதி வேற்றுமையும் பாராட்டுவார்கள். ஆனால் ஆடவர்களோ எந்த நிலைமையில் உள்ளவர்களானாலும் ஒன்று சேர்வார்கள். மிகவுங் கணக்காயும் கண்டிப்பாயு மிருக்கின்ற பெண்டிர்களைப்போ லிருக்கமாட்டார்கள்.

ஆடவரின் பிழைகள் வலிமையால் ஏற்படும்; பெண்டிரின் பிழைகள் வலிவின்மையா லேற்படும். இணைவிழைச்சியின் மயக்கத்தால் வரும் முரட்டியல்பு மெல்லினல்லாரின் உணர்ச்சியைப் பகுத்தறியுந் தன்மையதன்று. தங்கள் உடல் வலியில் குறைவுளது என்னும் எண்ணமானது, பெண்களிற் பெரும்பாலார்க்குத் தங்களுடை நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளுதற்கான வசதிகட்கு இடமாயிருக்கின்றது.

ஆடவருக்கு உறுதியான போக்குண்டு. பெண்கள் விரைவான போக்குடையவர்கள். உடலில் அவள் அவனளவு வலிமையுடையவளல்லள். ஆகையால் அவள் தன் சினத்திற்குப் புகலிடமாக முரடின்றி அடுக்கும் மொழிகளால் மொழிந்து வெளியிடல் கூடும். இதன் பொருட்டாக மூன்று அங்குல நாவுடைய பெண் வெறிகொண்ட இடத்தில் ஆறு அடி உயரமுள்ள ஆடவனைக் கொல்லக் கூடுமென்று பழமொழியும் விளங்குகின்றது. ஆடவர்களுக்குச் சினம் மிகுதியாயிருப்பதனாலும், பிழைப்புக்கு வேண்டிய செயல்களில் ஈடுபட்டிருப்பதனாலும் அடிக்கடி மிகுந்த குற்றவாளியாகின்றார்கள்.

ஆண்பிள்ளைகள், குறைபாட்டை மிகுதியாய் உற்று நோக்குவார்கள். பெண்கள் வல்லமையிற் சிறந்தவர்கள். ஆண்

பிள்ளைகள் சட்டம் ஏற்படுத்துவார்கள். பெண்டிர் விநயம் பாராட்டுவார்கள்; அழகைப்பற்றி மிகுதியாய் நோக்குவார்கள். பெண்கள் நயத்தையே நாடுவார்களென்பது பொதுவான கொள்கை. அவர்கள் உள்ளதைக் கொண்டு நல்லதைச் செய்வார்கள். புறஅழகிற் பற்றுடையவர்கள்.

பெண்கள் பொதுவாக இரக்கத்தோடு செயல் புரிவார்கள். ஆனால் எண்ணத்தில் எப்பொழுதும் அப்படி இல்லை. ஆண் பிள்ளை ஒன்றில் விருப்பமாயிருப்பான் அல்லது விருப்பமில்லாதவனா யிருப்பான். பெண்பிள்ளை ஒன்றை விரும்புவாள் அல்லது வெறுப்பாள்.

ஆண்பிள்ளை விரைந்த போக்கிலே அவாக்கொள்வான்; பெண் பிள்ளையின் அவா அழுத்தமானதாயிருக்கும். தன்னால் விரும்பப்பெற்ற ஆடவர்களிடத்தில் யாதொரு குற்றமுங் காணப்பொருள். வேண்டாதாரிடத்தில் நன்மையுள்ள தெனினும் மதியாள். தன்னால் விரும்பப் பெற்றவர்களிடத்திற் காணுங் குற்றங்கட்குத் தக்கவாறு அமைதி செய்துகொள்வாள். அதன் பொருட்டாகவே நெஞ்சறிந்த பொய்யை அவள் சொல்வதாகக் கருதுவதில்லை. ஏனெனில் தான் சொல்வதற்கு முன்னமே தான் சொல்வது மெய்யென உறுதி செய்து கொள்கின்றாள். ஒருத்தி தன் தீவினைகளை ஒப்புக் கொள்வாள்; குற்றங்களை ஒப்புக் கொள்வது அரிது. ஒருவன் தன் பிழையை ஒத்துக் கொள்வான்; ஒருத்தி தன் பிழையைத் தவறுதலென்பாள்—நாம் மன்னிப்போம்.

பெண்கள் தங்கள் மறை பொருள்களில் அடக்கமுடையவர்களாயிருப்பார்கள்; ஆனாற் பிறர் மறைபொருள்களில் அப்படி இருப்பதரிது.

ஆண்பிள்ளை விதி ஏற்படுத்துகின்றான்; பெண்பிள்ளை ஆள்கின்றாள். அவன் தலைமை பூணலாம்; அவள் நடத்துவாள்; அவன் ஆய்ந்தறிந்து உத்தி சொல்வான்; ஆனால் அதனை உறுதிப்படுத்துபவள் அவளே. அவன் அவளை அடக்க முயல்வான்; ஆனால் அவள் அவனை வயப்படுத்திக்கொள்வாள்.

ஆடவன் குடும்பத்துக்குத் தலையாயிருக்கலாம்: அவள் இதயமாய் இருக்கின்றாள். அவள் அறிவு உணர்ச்சியில் வயப்படும்; அவள் உணர்ச்சி அறிவில் வயப்படும். அவள் இயற்கை அன்பின் வழியது. அவனது இயற்கை அத்தகையதன்று. அவள் அவனிடத்தில் அன்பாயிருக்கின்றாளென்பதற்கு அவனுக்கு வேறு சான்று வேண்டுவதில்லை; அவள் அடங்கி நடத்தலே போதுமானதெனக் கொள்வான்; ஆனால் அவன் அவளிடத்தில் அன்புடையனாயிருப்பதற்கு நாள்தோறும் வெளிப்படையான சான்றுகள் சொல்லினுஞ் செயலினுங் காட்டப்படல் வேண்டும்.

ஆர்வமுள்ள ஆடவன் விரைவுடையனாயிருப்பான்: அவன் தனது நெஞ்சம் திரிந்துபோன போக்கின்படியெல்லாம் உடனே சீர்திருத்தத் துணிவான். அவள் ஒவ்வொரு நிலைமையிலும் நேரத்தைக் கடத்துவாள். அவன் விரும்புவது சிறிது, அவள் விருப்பம் மிகுந்ததாயினும் அவள் இணங்குவது அரிது; ஆண்பிள்ளை தன் ஆவலை நிறைவேற்றும் பொருட்டுத் தன் இன்னுயிர்க் காதலியையும் இணக்கத் துணிவான்; அவள் காதலுள்ள வரையிலுந் தன் கணவனை இடைவிடாது காதலிப்பாள். அவனோ அவ்வாறு செய்வதில்லை. இதற்கு ஏது என்னவென்றால் அவளைப் பார்க்கிலும் அவனுக்கு ஏற்பட்டிருக்கின்ற வேலைகள் மிகுதி; வாழ்நாட் போக்கில் அவன் ஈடுபட்டிருக்கின்ற வேலைகள் பல; ஆகையால் இல்வாழ்க்கையில் அவன் விருப்பத்தின்படி நினைவைச் செலுத்துதல் இயலாது.

கொடுத்தலும் எடுத்தலும்

ஆண்பால் பெண்பால்களுக்குப் பிறப்பியல்பாயமைந்துள்ள ஒற்றுமை வேற்றுமை நயங்களை இருபாலாரும் நன்கறிந்துகொள்வரேல், இருவரும் மெய்யன்புடையவர்களாயும் உண்மைக் காதலர்களாயும் வாழ்வார்களென்பதில் ஐயமில்லை. இல்லறத்திற்குரிய பெரும்பயன் ஆணும் பெண்ணும் இணங்கி வாழ்வதேயாம். கொடுத்தலும் எடுத்தலுங் கொள்கையாக அமையக் கடவது; ஆனால் இஃது அவரிருதிறத்தாரின் நினைவொருமையின்றி அமைவதரிது.

கொடுக்கூர் கோவிந்தன்

[திரு. காழி. சிவ. கண்ணுசாமி யவர்கள் B. A.]

(க௬உ - ம் பக்கத் தொடர்ச்சி)

"என்ன அவ்வாறு உறுதி கூறினையே மூளை கெட்டு விட்டதா என்ன?" என்று வண்டி மறைந்தவுடன் பட்டக்காரன் படபடப்புடன் சம்புலிங்கத்தைக் கேட்டான்.

சம்புலிங்கம்:—"அதெல்லாம் ஒன்றுமில்லை, நந்தவனச் சந்தையில் நம்மை யொத்த சிறந்த கொள்ளைத் தலைவர்கள் எவரும் வருவதில்லை; அங்கு வருபவர்களெல்லாம் முடிச்சவிழ்ப்பவர்களும் சோம்பேறிகளுமே. ஆகையால் நாம் வந்திருப்போமென்று எவரும் எதிர்பார்க்கமாட்டார்கள். ஏன், நமது பரட்டையும் முனியனும் திண்ணமாய்ச் செல்வார்கள்; அவர்களுடன் நாமும் சென்று வருவோமே?"

தம்மண்ணன்:—"அது சரி, என்னவோ தாடிக்காரியைக் குறித்த ஒரு எச்சரிக்கை செய்தாயே அது என்ன?"

சம்பு:—"இப்பொழுது அதைக் கூற முடியாது. பின்னால் அறிவீர்கள்" காசி மட்டும் தன் நண்பன் கருதியிருக்கும் சூழ்ச்சி என்ன வென்பதை ஒருவாறு உணர்ந்தவன்போற் குறு நகை புரிந்தான். மற்ற இருவர்களாகிய பட்டக்காரனுக்கும் தம்மண்ணனுக்குமோ ஒன்றுமே விளங்கவில்லை.

இதற்குள் மழை முழுதும் நின்று விட்டது. நிலவும் நன்றாக வீசியது.

இவர்கள் சாலையில் ஒரு முடுக்கைக் கடந்து திரும்பியபோது எதிரே தனியாக ஒரு குதிரை வீரன் வந்துகொண்டிருக்கக் கண்டனர்.

நிலவு வெளிச்சமாயிருந்தும் சம்புலிங்கத்திற்கு எதிரே வருபவனை எங்கேயோ நன்றாகப் பார்த்திருப்பது போன்ற ஒரு நினைவெழுந்தது. ஆயினும் திட்டமாக யாரென்றும் எங்கே யென்றும்

தெரியவில்லை. ஏனெனில் வந்தவன் முகத்தை முக்காற் பங்குக்கு மேல் கம்பளி கொண்டு போர்த்திருந்தான்; உடம்பு முழுவதும் அப்படியே. அப்படியிருந்தும் அவன் யாரோ தானறிந்தவனாகத்தா னிருக்கவேண்டும் என்ற நினைவு மட்டும் சம்புலிங்கத்தை விட்டு நீங்கவில்லை.

ஆகவே நெஞ்சிற் கலக்கமிருந்தவனாய்ச் சம்புலிங்கம் தன் குதிரையின் கடிவாளக் கயிற்றைச் சற்று இறுக்கிப்பிடித்தான். நீலவேணியும் உடனே தயங்கி மற்ற மூன்று குதிரைகட்கும் பின்னாகச் செல்லத் தொடங்கிற்று.

இதற்குள் எதிரே வந்த குதிரை வீரன் முதலிற்சென்ற தம் மண்ணனைக் கடந்து வந்தான். வந்தபோது கீழே குனிந்த வண்ணம் அவன் தம்மண்ணனைத் தன் கடைக்கண்களால் உற்று நோக்கியதுபோலத் தோன்றிற்று. பின் சென்ற பட்டக்காரனும் காசியும் அவ்வாறே நோக்கப்பட்டனர். அவர்களோ வந்தவனைப் பொருட்படுத்தாமல் தம் வழியே சென்றுகொண் டிருந்தனர். வந்த வேலை செவ்வனே நிறைவேறிற்று. இனி விரைவில் வீடு சேர வேண்டுமென்ற ஒரே கவலைதான் அவர்கட்கு.

நண்பர்கள் மூவரையுந் தாண்டித் தன்னருகே வந்த போது குதிரை வீரனின் தலை முன்னினும் மிகுதியாகக் குனிவுற்றதாகத் தோன்றிற்று. சம்புலிங்கத்திற்குத் தெரிந்த தெல்லாம் எதிரியின் மூக்கின் நுனிதான்.

தன்னருகே வந்த குதிரை வீரன் தன்னைக் கடந்து செல்லாமல் குதிரையைச் சட்டென நிறுத்தினது போலவும் ஏதோ ஒரு சிறு ஜயவோசை அவனிடமிருந்து எழுந்ததாகவும் சம்புலிங்கம் நினைத்தான். நினைத்ததுந் திரும்பி எதிரியை உற்று நோக்கினான்.

அதே நேரத்தில் குதிரை வீரன் பெரிய சுழல் துப்பாக்கியை நீட்டித் தன்மீது குறி பார்த்துக்கொண் டிருக்கக் கண்டான்; உடனே இமைப்போதில் குதிரையின் இடது புறமாக உடலை வளைத்துக் குனிந்தான். தலைமீது ஒரு குண்டு விர்ரென்று பாய்ந்து போயிற்று.

சட்டைப்பையிலிருந்து தன் கைத் துப்பாக்கியை யெடுத்து சம்புலிங்கம் வெடி தீர்த்தான். ஆனால் அதற்குள் எதிரி காற்றினும் கூடிய விரைவில் தலையைக் குனிந்த வண்ணம் பறந்து செல்வதைப் பார்த்தான். தன் குண்டும் குறி தவறிற்று.

"என்ன? என்ன, ஏது வெடி யோசை? அவன் உன்னைச் சுடுவா னேன்?" என்று தம்மண்ணன் பரிந்து கேட்டான்.

காசியும் பட்டக்காரனுமோ அதற்குள் தங்கள் குதிரை மீது குதிரை வீரனைத் துரத்திச்சென்றனர்.

அது கண்ட சம்புலிங்கம் "வேண்டாம், வேண்டாம், பட்டக் கார் வேண்டாம், காசி. உடனே திரும்பு" என்று கூவினான்.

அவர்களும் குறை நெஞ்சுடன் திரும்பினர்.

சம்புலிங்கம்:—"ஏன் அவன் என்னைச்சுட முயன்றான் என்று என்னாலறிய முடியவில்லை. அவன் சுட்டானே என்று நானும் சுட்டேன். அவன் குறி தவறியதுபோல், என் குறியுந் தவறியது,

காசி:—முதலில் அவன் யாரென்று தெரிந்ததோ?

பட்டக்காரன்:—அவனை எளிதில் விடக்கூடாது. புறப்படுவோம். உடனே அரை நொடியில் துரத்திப் பிடித்து விடலாம். நாணயமான கொள்ளைக்காரர்களை நாடோடிப் பயல்கள் சுட்டு விட்டுத் தப்பிச் செல்வதா?

சம்பு:—"இல்லை இப்பொழுது துரத்திச் செல்வது தவறு. முதலியாரின் வண்டி முன்னால் சென்றுகொண்டிருக்கின்ற தென்பதை மறக்கவேண்டாம். சீ! இவன் சுட்டால் சுட்டுவிட்டுப் போகிறான். பத்தொடு பதினொன்று அத்தொடு இது ஒன்று. எத்தனையோ குண்டுகள் என் தலை மீது பறந்து சென்றிருக்கின்றன. இதைப் பற்றியா நான் கவலை கொள்ளப்போகிறேன்.

தம்மண்:—அப்படியானால் நிச்சயமாக அவன் யாரென்று தெரியவில்லையோ?

சம்பு:—இல்லை, தெரிந்தவனாகத்தா னிருக்கவேண்டு மென்று தோன்றினும் யாரென்று உறுதியாகச் சொல்ல முடிய வில்லை. கொடுக்கூர் கோவிந்தன் மட்டும் பாலக்கரைச் சிறையில் இருக்கிறான் என்று உறுதியாகத் தெரிந்திராவிட்டால் அவன் தான் இவன் என்று கூறி விடுவேன்.

காசி:—முனியன் யாரோ ஒருவன் அச்சிறையிலிருந்து தப்பி யோடியதாக சொல்லிக்கொண் டிருந்தானல்லவா? கொடுக்கூர் கோவிந்தனாகமட்டு மிருந்தால் இதற்குள் தெரிந்திராதா?

தம்மண்:—ஆம், ஆம், அவனாக விருக்க முடியாது.

சம்பு:—இவன் கோவிந்தனல்லன்; இருந்தாலும் இவனது கூர்ந்து நீண்ட மூக்குநுனிமட்டும் கோவிந்தனுடையதையே யொத்திருந்தது.

பட்டக்காரன்:—தப்பினவன் கோவிந்த னென்பதால் ஊர் முழுவதும் தெரியவேண்டு மென்பது கட்டாயமா? இவன்தான் கோவிந்தனோ என்னவோ?

இவ்வாறு பட்டக்காரன் கூறினும் மற்றவர்கள் அதை யொப்பவில்லை.

கொடுக்கூர் கோவிந்தனும் இவர்களைப்போல் கொள்ளைக் காரனே யாயினும் அவன் கொலைக்கஞ்சாக் கசடன், ஈவிரக்கமற் றவன். பெரும்பொருள் படைத்துப் பட்டம் பல பெற்ற குப்பு சாமி ஐயர் என்ற ஒருவன் துணை கொண்டு சம்புலிங்கத்தைக் கவிழ்க்க முயற்சி செய்தான்; ஆனால் நீலவேணியும் காசி முதலிய நண்பர்களும் செய்த உதவியால் அம்முயற்சி நிறைவேற வில்லை. அதனால் கோவிந்தனுக்கும் ஐயருக்கும் சண்டை உண்டாயிற்று. வார்த்தை தடித்தபோது கோவிந்தன் வெகுண்டு கத்தி கொண்டு ஐயரைக் குத்திவிட்டான். பெரிய இடத்துக் கொள்ளைக்காரனை, வாழ்வு நடத்தி வந்த ஐயரும் மடிந்தார்,

அந்தக் கொலைக் குற்றத்திற்காக கோவிந்தன் சிறையிலடை பட்டுத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டான். நீதி மன்றத்தில் தீர்ப்புக் கூறப்பட்ட பொழுது தம்மண்ணனும் சம்புலிங்கமும்

மாற்றுடை தரித்துச் சென்று கேட்டு வந்திருந்தனர். ஆயினும் தண்டனை மட்டும் எதனாலோ தள்ளிவைக்கப்பட் டிருந்ததாகக் கூறப்பட்டது.

எப்படியும் ஒரு நாள் தண்டனை யடையாமற் போகான் என்ற ஓர் உறுதியினால் சம்புலிங்கமும் அவன் நண்பர்களும் கோவிந்தனைப்பற்றி வீடு திரும்புவதற்குள் மறந்தே விட்டனர் என்று கூறலாம். போதாக் குறைக்கு வீடுவந்து சேர்ந்ததும் சிறையிலிருந்து தப்பியவன் யாரோ ஒரு முடிச்சு மாறியாம் என்று முனியன் கூறவே எஞ்சியிருந்த ஐயமும் அறவே ஒழிந்தது.

ஆனால் உண்மை யென்ன வென்றாலோ அன்று சிறையில் இருந்து தப்பியது ஒருவரல்லர், இருவர். ஒருவன் மேற்குறித்த முடிச்சுமாறி, மற்றொருவன் கொடுக்கூர் கோவிந்தன். அவனே சம்புலிங்கத்தைச் சுட முயன்றவன்!

இரண்டாங் கூறு

நந்தவனக் கொண்டாட்டம்

"நிச்சயமாக நம்மை யாருமே கண்டுகொள்ள முடியாது" என்று விந்தையுங் களிப்புங் கலந்த குறிப்பு முகத்திற் றோன்ற மொழிந்தான் பட்டக்காரன்.

பட்டக்காரன் கூறியது உண்மையே. அன்று நந்தவனக் கொண்டாட்ட ஆரம்ப நாளாகையால் யாவரும் மாற்றுடையணிந்துகொண் டிருந்தனர். உடை மாற்றம் ஒரு சிறிதே செய்திருந்த போதிலும் சம்புலிங்கத்தின் உருவம் அடியோடு மாறுபட்டுத் தோற்றிற்று. நாட்டுப் புறத்தில் வாழும் ஒரு பெரிய செல்வந் தனது மகன் முதன் முதலாகச் சென்னை வளம் பார்க்க வந்தால் எவ்வாறிருப்பானோ அவ்வாறே விளங்கினான் சம்புலிங்கம்.

அவனருகில் ஒரு கோமுட்டி செட்டியார் நின்றுகொண் டிருந்தார். பெரு முதல் வைத்து வாணிகம் நடத்தி வருபவர் போல் அவர் தோற்றினார். உற்று நோக்கினால் அவரை யறிந்-

தோர்க்கு அவர் தம்மண்ணனே என்று புலப்படும். அதுபோல நரைத்த மீசையும் தாடியுங் கொண்ட கிழ உருவத்துடன் அருகில் நின்ற மற்ருெரு பெரியவர் பட்டக்காரன் என்பதும் விளங்கும்; குறும்பு நிறைந்த கண்கள் மட்டும் மாறுதல் அடையவில்லை யாதலால் அவைகள் ஒரு வேளை பட்டக்காரனை நன்ரு யறிந்தோர்க்குப் புலப்படுத்திவிடுமோ என்னமோ எனக் காசி சற்று அஞ்சினுன்.

காசியோ, கத்தி மணி முதலிய பொருள்கள் விற்கும் வடநாட்டுக் குறவன் உருவந் தாங்கிநின்ருன். செம்பட்டை மயிர் நிறைந்த மீசைகளை மட்டும் நிறமாற்றி யிருந்தால் வாயிற்படியில் நின்ற முனியனைச் சம்புலிங்கங்கூட ஒரு குடியானவ னென்றே கூறி விடுவான். ஆயினும் நாட்டுப்புறத்திலுள்ள குடியானவர்கட்கும் செம்பட்டை மயிர் இருக்கக்கூடும் என்ற உண்மை கருதியே முனியன் மீசைகளை நிறம் மாற்ருது விட்டான் போலும். இருளினுங் கரிய இயற்கை நிறம் வாய்ந்த பரட்டை தன் னிறமாற்றிக் கொள்ளுதல் என்பது முடியாதாகையால் வேடிக்கை காட்டி வயிறு வளர்க்கும் ஒரு செப்பிடு வித்தைக்காரன்போல் உடைகளை அணிந்திருந்தான்.

“ஆம் யாவரும் கண்டு கொள்ள முடியாது தான், இருந்தாலும் பெரியவரே ஏதோ சென்னை நகரம் மிகவுங் கெட்டுப்போன ஊர் என்று எங்கள் ஊரார் சொல்லிக் கொள்வார்கள். ஏறுகிறவன் சரியாக விருந்தால் குதிரை என்ன பண்ணும் என்பது போல் நாம் எச்சரிப்புடன் நடந்து கொண்டால் சென்னை நகரம் என்ன பண்ணி விடும் என்ற துணிவுடன் வந்து விட்டேன். ஏதோ இது வரையில் ஒழுங்காகக் காலந் தள்ளி வந்த எனக்கு இந்த நந்தவனக் கொண்டாட்டத்திற்குச் செல்வதால் யாதொரு கெடுதியும் வராதென நம்புகிறேன்” என்று தான் மாற்றுருவத்திற் கேற்ப வேடிக்கையாக மொழிந்தான் சம்புலிங்கம்.

தம்மண்ணன்:—“இராமானுஜ! இராமானுஜ! அப்படியெல்லாம் நேரிடவே நேரிடாது. கவலை வேண்டாம். ஸ்ரீமந் நாராயண னிருக்கார். என்ன சம்பு, தெரிந்ததா?”

சம்புலிங்கம்:—"ஆ, மறந்தும் அப்பெயரால் என்னைக் கூப் பிட்டுவிடப்போகிறாய். எச்சரிக்கை. தொண்டை நாட்டுக் கோட்டூர் இளைய மிட்டாதார் நாராயணசாமி ரெட்டியார்; பரம் பரைச் செல்வந்தர்; வேண்டுவோர்க்கு அள்ளி யள்ளி யிறைக்கும் வள்ளல்; ஞாபக மிருக்கட்டும்."

தம்மண்ணன்:—"இராமானுஜ! தேவர் சொல்றது மறப்பனா இன்ன? இல்லை நன்றாய் ஞாபகமிருக்கும். இருந்தாலும் (பரட்டை யைநோக்கி) பரட்டை, நமது இளைய மிட்டாதார் இன்று எத் தனை பைகள் வெளியில் எடுக்கப்போகிறார் என்பதைப் பார்க்க வேண்டும். மற்றவர்கள் பைகளை எடுத்து உள்ளே வைத்துக் கொள்ளாமல் வந்தாற் போதாதா?"

பரட்டை:—"எசமான் சொன்னா எதிருண்டா என்ன? அள்ளி எறைப் பேண்ணு சொன்னாக் கண்டிப்பா பணமழை தான். இருந்தாலும் பரட்டை மட்டும் பக்கத்திலேயே இருந்து ஒரே மழையா பேஞ்சூடாமெ பார்த்துக்குவான். என்னா முனியா, நாம்ப சொன்னது சரிதானா?"

முனியன் இக் கேள்விக்குப் பதில் அளிப்பதன் முன் வெளியே சென்று விட்டான். அறுவரும் ஒன்றாய்ச் செல்வ தென்பது முடியாது. சம்புலிங்கம், தம்மண்ணன், பட்டக் காரன் ஆகிய மூவர்கள் மட்டும் மாற்றுடையோடு இருக்கும் பொழுதுகூட ஒன்று சேர்ந்து புறப்பட்டுப் போனாலும் ஐயம் தோற்றும். மற்றவர்கள் தனித்தனியேதான் செல்ல வேண் டியதாக இருந்தது. ஆகையினாற்றான் முனியன் முதலிற் புறப் பட்டது. பரட்டையும், அவன் சென்ற சிறிது நேரங்கழிந்து காசியும் அவ்வாறே வெளியேறினர்.

ஒரு நாழிகை நேரங் கழித்து மற்ற மூவரும் புறப்பட்ட னர். சொந்த குதிரைகளின் மீதிவர்ந்து சென்றால் ஐயப்பாட் டிற் கிடமாகுதலால் வாடகைக் குதிரைகள் மூன்று பிடித்து அவற்றின் மீதேறிச் சென்றனர்.

(தொடரும்)

காதல் மணம் *

[மறைமலையடிகள்]

அன்பர்களே! உலகிய லொழுக்கத்திற்கும் இறைவன் திருவடிப் பேற்றிற்கும் ஆணிவேர்போல் இருப்பதாகிய இன்ப ஒழுக்கமானது மெய்யன்பின்வழி நடக்குமாயின் அப்போது தான் அது 'காதலின்பம்' என உயர்த்துப் பேசப்படுமென்பதும் அஃது அங்ஙனம் அன்பின்வழி நடவாதாயின் இழிந்த காமம் என இழித்துப் பேசப்படுமென்பதும் நம் செந்தமிழ்த் தெய்வ ஆசிரியர் எல்லார்க்கும் ஒத்த முடிபா யிருக்கின்றன. ஏனென்றால் ஓர் ஆண் மகனும் ஒரு பெண் மகளும் தம்மில் ஒருவரை யொருவர் உயிர்போற் கருதி நிரம்பிய அன்பால் ஒழுகினு லன்றிப் பெண்பாலார்க்குக் கற்பொழுக்கம் நிலைபெருது. கற்பொழுக்கம் நிலைபெருதாயின் நன் மக்களைப் பெறுதலும் உளதாகாது. உலகில் ஒருவரோ டொருவர் அமைதியா யிருந்து வாழாமற் பகைமையுஞ் சினமுங் கொண்டு அல்லல் உழப்பர். அதனுற் றெய்வ நம்பிக்கையுந் தெய்வ வணக்கமும் இல்லையாய்ப் போம். எங்குங் குடியுங் கொலையுங் கொடுமையும் மலிந்து மக்கள் வாழ்க்கையானது சின்ன பின்னமாய்ச் சிதறிவிடும். இத்தகைய குடி கேடான செயல் ருஷியா முதலான மேனுடுகளிற் பரவி அங்குள்ள மக்களை நினைப்பினுங் கொடிய துன்பத்திற் படுத்துத் தேய்த்து வரும் நிலையினைச் சிறிதாயினும் அழுந்தி யறிய வல்லார்க்கே, நம் செந்தமிழ்த் தெய்வ ஆசிரியர் வற்புறுத்திச் சொல்லிய காதலின்ப வாழ்க்கையின் விழுப்பம் புலனுகா நிற்கும். மற்றுக் காதலன்பின் வயமாகி மனங் கூடினுர்க்கோ ஒருவரை விட்டுப் பிறரொருவர் மேல் உள்ளஞ் செல்லாதாதலின், அவர்க்குக் கற்பொழுக்கந் தானுகவே நிலைபெறும். அவர்க்குக் கற்பொழுக்கத்தினைக் கற்பிக்க வேறெவருமே வேண்டப்

---

* திருப்பாதிரிப்புலியூர் சைவர் மாநாட்டுக்குத் தலைமைபூண்டு செய்த முன்னுரைச் சொற்பொழிவி னொருபகுதி.

படார். அவர், தாம் காதல் கொண்ட அன்பரையன்றிப் பிற ரெவரையுங் கருத மாட்டாமையால், தம் கருத்தறியாமல் தம்மைப் பிறரொருவர்க்கு மணம் புகுத்த எவரேனும் முனைகுவராயின் அவர்க்குத் தமதுள்ளக் கருத்தைப் புலப்படுத்தித் தமது கற்பொ ழுக்கத்தினை நிலை நிறுத்திக் கொள்வர். அதுவும் வாயாதாயின் தமதுயிரையே துறப்பரன்றித் தமது கற்பிற் சிறிதும் வழுவார். தம் காதலர் இறந்துபடின் தாமும் உயிர் தாங்கார். இத் தன்மை யராகிய பண்டைத் தமிழ் மக்களின் கற்பொழுக்க மாட்சியினைப் பழந் தமிழ் நூல்களிற் போந்த சில பாட்டுகளை எடுத்துக் காட்டி விளக்குதும். முதலிற் கலித்தொகை என்னும் அரிய சங்க நூலிற் காணப்படும் ஒரு செய்யுளை இங்கெடுத் துரைப்பாம்.

'சுடர்த்தொடிஇ! கேளாய்! தெருவில்நாம் ஆடும்
மணற்சிற்றில் காலிற் சிதையா அடைச்சிய
கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யும் சிறுபட்டி மேலோர்நாள்
அன்னையும் யானும் இருந்தேமா இல்லிரே!
உண்ணுநீர் வேட்டேன் எனவந்தாற், கன்னை
அடர்பொற் சிரகத்தால் வாக்கிச் சுடரிழாய்
உண்ணுநீர் ஊட்டிவா வென்றாள், எனயானும்
தன்னை யறியாது சென்றேன்மற் றென்னை
வளைமுன்கை பற்றி நலியத், தெருமந்திட்டு
அன்னாய் இவனொருவன் செய்ததுகாண் என்றேனா,
அன்னை யலறிப் படர்தரத், தன்னையான்
உண்ணுநீர் விக்கினான் என்றேனா, அன்னையுந்
தன்னைப் புறம்புஅழித்து நீவ,மற் றென்னைக்
கடைக்கண்ணாற் கொல்வான்போல் நோக்கி நகைக்கூட்டஞ்
செய்தான்அக் கள்வன் மகன்.'

தன்னைப் பிறனொருவனுக்கு மணம் பொருத்தக் கருதித் தன் பெற்றோர் செய்யும் ஏற்பாடுகளைக் கண்டு திகில் கொண்டவளான அழகு மிக்க ஒரு கற்புடை மங்கை, தான் ஒருவன்மேற் காதல் கொண்டிருக்குங் குறிப்புத் தன் தோழிக்குப் புலனாம்படி சொல் லுதலை இச் செய்யுள் எடுத்தியம்புகின்றது. இதுகேட்டுத் தன் தலைவியின் காதற் குறிப்பறிந்த தோழி அவடன் பெற்றோர்க்கு

அதனை அறிவித்து அவள் காதலித்த இளைஞனுக்கே அவளை மணங் கூட்டுவள். இதனை 'அறத்தொடு நிற்றல்' என்பர் பொருளிலக்கணத்தில். இச் செய்யுட் பொருள் வருமாறு:—

"விளங்கா நின்ற தொடியணிந்த தோழீ! என் மனத்துள் ளதனைக் கேட்பாயாக! தெருவிலே நாம் மணலாற் சமைத்து விளையாடுஞ் சிறிய வீட்டினைக் காலால் எற்றி அழித்தும் நமது கூந்தலிற் செருகிய பூமாலையை அறுத்தும், வரிந்த நமது பந்தினை எடுத்துக்கொண்டோடியும் நம் மனம் நோவத்தக்க குறும்புகளைச் செய்யும் அந்தச் சிறு பட்டிப் பையன், முன் ஒரு நாள் எம் அன்னையும் யானும் வீட்டின்கண் இருந்தேமாக, எம்பாற் போந்து, 'வீட்டில் உள்ளீரே! உண்ணப்படுந் தண்ணீர்க்காக விடாய் கொண்டு வந்தேன் என்று சொல்லி வந்து நின்றானுக்கு, அன்னையானவள்: என்னை நோக்கிச் 'சுடரிழாய்! பொற்!றகட்டாற் செய்த கரகத்தால் உண்ணு நீரை முகந்து சென்று வார்த்து அதனை அவன் பருகச் செய்துவா' என்று கூறினாள். கூறவே, யானும் அவனைப் பட்டிப்பையன் என்று நினையாமலே அன்னை சொன்னபடியே செய்ய அவன்பாற் சென்றேன். ஆனால், அவன் வளையல் அணிந்த எனது முன் கையினைப் பிடித்திழுத்து வம்புசெய்யவே யான் மனம் மருண்டு 'அன்னாய்! இவன் ஒருவன் செய்ததைப் பாராய்!' என்று கூவினேனாக, உடனே அன்னை அலறிக்கொண்டு என்பால் வருதலும், சடுதியில் யான் மனந்தெளிந்து 'இவன் உண்ணுநீரைப் பருகும்போது விக்கி வருந்தினான்' என்று அவன் செய்ததனை மறைத்து மொழிந்தேன். அதுகேட்டு அன்னையும் அவன் முதுகைப் பலகாலுந் தடவினள், அப்போது என்னைக் கடைக்கண்ணாற் கொல்வான்போல் நோக்கி,மகிழ்ச்சிக்கு ஏதுவான மணத்தைக் கள்வனாகிய அவ்விளைஞன் முன்னமேசெய்தனன், இதனை அறிவாயாக!"

பார்மின்கள் அறிஞர்களே! கற்பிற்சிறந்த இளைய தமிழ் மங்கை ஒருத்தி தன்னிளமைக் காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளில் வைத்துத் தான் ஓர் இளைஞன்மேற் காதல் கொண்ட

மையினை எவ்வளவு நுட்பமாக, எவ்வளவு திறமையாக, எவ்வளவு மனக்கவர்ச்சியுண்டாகத் தான் கொண்ட அக்காதற் கற்பொழுக்கத்திற்குப் பழுது வாராமற் கூறுகின்றுள்! தான் ஏதும் அறியாப் பேதைப் பெண்ணுய் இருந்த காலத்திலேயே தன் உள்ளம் ஓரிளைஞன்பால் அன்பிற் பதிந்தமையும், தானிழைத்த மணல் வீட்டினைக் காலால் எற்றியுந் தன் கூந்தலிற் செருகிய மாலையை அறுத்துந் தான் ஆடும் பந்தினை எடுத்துக் கொண்டோடியும் அவன் தான் வருந்தத் தக்க குறும்புகள் செய்தும், அக்குறும்புகள் அத்தனையும் தன்பால் வைத்த அன்பினுலேயே அவன் செய்தமையும், அதனுல் அக்குறும்புகள் தன் மனம் நோவச் செய்தனபோற் றேன்றினும் செய்யாமையும், 'சிறு பட்டி' என அவனைத் தான் சுட்டுஞ்சொல்லே அவன்பால் தனக்குள்ள அன்பின் அறிகுறியாதலும், விடாய் கொண்டு வந்தானெனினும் இளைஞனை ஒருவற்குத் தான் தனியே சென்று விடாய்தணித்தல் நாணுடைய பெண்டன்மைக்கு ஏலாமையின் அன்னையுந் தானும் இருந்தக்கால் அவன் விடாய்த்து வந்தா னென்றமையும், அங்ஙனம் அன்னையோடு இருந்தவிடத்தும் அன்னையின் ஏவுதலாலேயே தான் நீரெடுத்து அவன்பாற் சென்றமையும், அவன் தன்பால் வைத்த காதற்கிழமையால் தன் கையைப்பிடித்து வம்புசெய்யினும் அதற்கு எளிதிலே உடன்பட்டிருத்தல் அச்சமும் நாணமும் இயற்கையே வாய்ந்த தன் பெண்டன்மைக்கு ஏலாமையின் அதற்கிசையாது தான் அன்னையைக் கூவியழைத்தமையும், அன்னை அருகுவந்ததும் அதுபற்றி அவனை அவள் சினவாமைப்பொருட்டு 'அவன் உண்ணுநீர் விக்கினன்' என அவன் செய்த குற்றத்தை அவன் மேலுள்ள காதலால் தான் மறைத்து மொழிந்தமையும், அன்னையும் அவன்றன் எழில்நலங் கண்டு அவன் விக்குதல் பொருளாய் அவன்றன் முதுகினைத் தடவிக் கொடுத்தா ளென்றமையும், அப்போது தான் செய்ததனை ஒரு குறும்பாக நினைந்து அவன் தன்னைக் கடைக்கண்ணுற் பார்த்துச் சினந்தமையும் எல்லாம்அவ் அறிவுடைக் கற்பரசி எத்துணை நயமாகத், தன் உயர்ந்த பெண்டன்மைக்கு எத்துணை இசைவாகச், சின்னஞ் சிறிய

பருவம் முதலே தான் கொண்ட காதற் கற்பொழுக்கம் எத்துணைச் சிறந்ததென்பது புலனாகக் கூறியிருக்கின்றாள். அத்துணை விழுமிய காதற் கற்புடைத் தமிழ்மக்கள் வழிவந்த நாம் இவ்வருமையினைக் கனவினும் நனவினும் நினைந்து நினைந்து வியக்கற்பாலமல்லமோ !

இத்துணைச் சிறந்த பண்டைத் தமிழ் மாதரின் காதற் கற்பொழுக்கத்தை எடுத்துரைக்கும் இத் தனித் தமிழ்ச் செய்யுள் வழக்கும் பாராட்டற்பாலதா யிருக்கின்றது,வான்மதி மண்டில ஞாயிற்று மண்டிலங்களினும் மேலுயர்ந்து செல்லுங் கூடகோபுர மாளிகைகளைக் கற்பித்து, நேரிற் சென்று பார்த்தால் ஒரு சில குடிசைகளே யுள்ள ஓர் ஊரில் அக்கட்டிடங்கள் உளவாக மனக்கோட்டை கட்டி, அக்கட்டிடங்களின் மேலடுக்குகளில் உள்ளவராக மாதர்களை இருத்தி, அம் மாதரின் முடிமுதல்அடிகாறும் உள்ள ஒவ்வோர் உறுப்புகளையும் பற்பல செய்யுட்களால் அழகுபடுத்திப் பாடி, இங்ஙனமே இன்னும் இல்லாத பொய்களையெல்லாம் ஏராளமாய்ப் புனைந்துகட்டிச் சொல்லும் இக் காலத்தார் செய்யுள் வழக்கெங்கே! உள்ளவற்றை உள்ளவாறே எடுத்தியம்பிச், சிறிதும் பிழைபடாதெழுதிய ஓவியம் போல்வதாகிய பழந்தமிழ்ப் புலவரின் செய்யுள்வழக் கெங்கே! இவ்விரண்டிற்கும் உள்ள வேறுபாட்டினைக் கம்ப ராமாயணச் செய்யுளோடு இக் கலித்தொகைச் செய்யுளைச் சிறிது ஒப்பிட்டு நோக்குவீர்களாயின் நன்கறிவீர்கள். அது நிற்க.

இனிப், பண்டைக் காதற் கற்பொழுக்க மாதர் தங்கணவர் இறந்துபட்ட ஞான்று, அவன்றன் பிரிவினை ஆற்றாராய் ஏங்கி உயிர் துறந்த நிகழ்ச்சிகளும் பல. இவ்வாறு நிகழ்ந்ததொரு நிகழ்ச்சியினைப் புறப்பொருள் வெண்பா மாலையிற் போந்த,

'ஒருயி ராக உணர்க உடன்கலந்தார்க்
கீருயி ரென்பர் இடைதெரியார்—போரில்
விடனேந்தும் வேலோற்கும் வெள்வளையி னாட்கும்
உடனே உலந்த துயிர்'

என்னுஞ் செய்யுள் கூறுகிற்கின்றது. ஆசிரியர் தொல்காப்பியனுர்காலத்தில் இத்தகைய நிகழ்ச்சிகள் பல நிகழ்ந்தமையால் அவர் அவற்றிற்கு 'மூதானந்தம்' எனப் பெயரிட்டு, அதன் இலக்கணமுங் கூறினுர். தன் காதற் கணவன் கோவலனை இழந்த கண்ணகி பட்ட துயரினை நினைப்பிற் கன்னெஞ்சமுங் கரையுமன்றே? அவள் தன் கணவனைக் கொலை செய்வித்த பாண்டியனுக்குஅறிவு தெருட்டிப் பதினுன்காம் நாள் தன்னுயிரினைத் துறந்து தன் கணவனுயிரோடு வானுலகு சென்ற ஆற்றருங் காட்சியினைக் குறவருங் கண்டன ரல்லரோ?

இனித், தன் கணவன் பூதப் பாண்டியன் மாய்ந்த ஞான்று அவனைப் பிரிந்த துன்பம் பொறுளாய் அவன்றன் காதன் மனைவி பெருங்கோப் பெண்டு தீப்பாயச் சென்ற வழி, அவ்வாறு செய்தலாகாதென விலக்கிய சான்றேர்க்கு அவள்,

'பல்சான் றீரே! பல்சான் றீரே!
செல்கெனச் செல்லா தொழிகென விலக்கும்
பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான் றீரே!
அணில்வரிக் கொடுங்காய் வாள்போழ்ந் திட்ட
காழ்போல் நல்விளர் நறுநெய் தீண்டாது
அடையிடைக் கிடந்த கைபிழி பிண்டம்
வெள்ளெட் சாந்தொடு புளிப்பெய்து அட்ட
வேளை வெந்தை வல்சி யாகப்
பரற்பெய் பள்ளிப் பாயின்று வதியும்
உயவற் பெண்டிரேம் அல்லேம் மாதோ;
பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட் டீமம்
நுமக்குஅரி தாகுக தில்ல; எமக்குஎம்
பெருந்தோட் கணவன் மாய்ந்தென அரும்பற
வள்ளிதழ் அவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையுந் தீயுமோ ரற்றே'

என்று செய்யுளாகவே விடை கூறிய நிகழ்ச்சி நம் தமிழ் நங்கையரின் காதலன்பின் மாட்சியினை மலைமேல் வைத்த விளக்குப் போல் உலகெங்கும் விளங்கச் செய்கின்ற தன்றே?

இவ்வாருகத் தம் உயிரையும் ஒரு துரும்பாகக் கருதி நங்

நொச்சித் திணை

தம் தமிழ்ப் பெருமாட்டிமார் தம் காதலர் மடிந்த வழித் தாமும் உடன் மடியுமாறு அவரை அவ்வாறு ஏவியது எது? அவர்தங் கொழுநர்பால் வைத்த ஒப்புயர்வற்ற காதலன் பன்றோ? எனவே, மாதர்க்குச் சிறந்த கற்பொழுக்கமாவது அவர்தங் காத லன்பின் பயனாய் அவர்பால் இயற்கையில் உள தாவதே யன்றிப், பிறர்க்கு அஞ்சியும் பிறர் கூறும் அறிவுரை கேட்டும் வருவதன் றென்பது புலனாகின்றதன்றோ? இங்ஙனம் இயற்கை யொழுக்கமாய் வரற்பாலதாகிய கற்பிற்குக் காத லன்பு ஒன்றுமே சிறந்த ஏதுவா யிருத்தலைப் பலபடியாலும் மக்க ளியற்கையில் வைத்து ஆராய்ந்து கண்டமையா லன்றோ ஆசிரியர் **தொல்காப்பியனார்** 'இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு, அன்பொடு புணர்ந்த ஐந்திணை' என்று ஓதியருளி னார். அம் முதலாசிரியர் வழி வந்த **திருவள்ளுவர்** முதலான சான்றோரும் அங்ஙனமே அஃது அன்பின் வழி நடக்கற்பாற் றென்று பண்டுதொட்டு இன்றுகாறும் வலியுறுத்தி வந்திருக் கின்றன ரல்லரோ?

நொச்சித் திணை

[இளவழகனார்]

குன்றுஉயர் திங்கள்போல் கொற்றக் குடைஒன்று
நின்றுஉயர் வாயிற் புறம்நிவப்ப-ஒன்றார்
விளங்குஉருவப் பல்குடை விண்மீன்போல் தோன்றித்
துளங்கின்வே தோற்றம் தொலைந்து.

(திகடூர், எயில்காத்தல்)

'மலையுச்சியில் உயர்ந்து விளங்குந் திங்களைப்போல அரண கத்தரசனது வெற்றிக்குடை யொன்று உயர்ந்த மதில் வாயிலில் நின்று உயர்ந்து விளங்க, ஏனைப் பகைவருடைய விளங்கிய உருவத் தையுடைய பலவான குடைகள் விண்மீன்கள் போலச் சிறிய வாய்த் தாழத் தோன்றித் தமது வெற்றித் தோற்றந் தொலைந்து நிலை தளர்ந்தன' வென்க.

'வாயிற்புறம்' என்பதிற் புறம் ஏழனுருபு; 'செல்லுமென் னுயிர்ப்புறத் திறுத்தந்த மருண்மாலை'* யென்னுங் **கலித்தொகை** யினும் புறம் ஏழனுருபின் மேலதாய் வந்தமை காண்க. 'தொலைந்து துளங்கின' வென்க. 'தோற்றந்தொலைந்' தென்றூர், தலைமைக்காட்சி கெட்டு நிலை ஒடுங்கின வென்றற்கு. நொச்சியரசன் குடைக்குத் திங் களையும் ஏனை உழிஞையரசர் குடைகட்கு விண்மீன்களையும் உவமை காட்டினமை, முறையே வெற்றியையுந் தோல்வியையும் உணர்த்தா நிற்கும்.

போர்செய்த லாற்றுது அரணகத்துச் சென்று வாயிலடைத் துக்கொண்டு பதுங்கியிருந்த அரசன், மாற்றூர் தன்னைப் பின்பற் றியபடியாய் அரணை அணுகி முற்றிப் பொருதல் கண்டு அவ்வர ணுதவியாய் நின்று அவரொடு தானும் பொருது அரண்காத்தலே இங்கு 'நொச்சிபொழுக்கம்' அல்லது **நொச்சித் திணை** யெனப் படும். இந்நொச்சித் திணையை ஆசிரியர் **தொல்காப்பியனூர்** 'அன்றி முற்றிய அகத்தோன் வீழ்ந்த நொச்சியும்'† என்று 'குடையும் வாளு' மென்னும் நூற்பாவில் ஒரு துறையுறப்புக் கூறி விளக்கி உழிஞைத் திணைக்கண் அடக்குவர். ஏனென்றூல், அஃது உழிஞை யைப்போல அத்துணை முதன்மையுடைய தாகாமையி னென்பது. புறப்பொருள் வெண்பாமாலையுடையார் தமது நூன் முறைப்படி இந்நொச்சித் திணைக்கென ஒரு தனிப்படலம் வகுத்து, அதற்கோ ரொன்பது துறைகள் கூறி நிறுத்துகின்றூர்.

'நுவலருங் காப்பி னொச்சி; ஏனை
மறனுடைப் பாசி; ஊர்ச்செரு வென்றூ;
செருவிடை வீழ்தல்; திண்பரி மறனே;
எயிலது போரே; எயில்தனை யழித்தல்,
அழிபடை தாங்கல், மகண்மறுத்து மொழிதலென
வெச்ச மின்றி யெண்ணிய வொன்பது
நொச்சித் திணையுந் துறையு மாகும்'

என்பது **வெண்பாமாலையின்** நொச்சித்திணை நூற்பாவாகும். எயில் காக்கும் அகத்து வீரர் அதற்குரிய நொச்சிப்பூவைத் தலையிற்

* கலித். கஉஅ. † தொல். புறத். கந

சூடிக்கொள்ளல் 'நொச்சி' யென்றும், தமது படையைச் சார்ந்த வீரரும் மன்னரும் விண்ணுலகு சென்றமையை எடுத்துக் கூறுதல் 'மறனுடைப்பாசி' யென்றும், ஊரிடையே அரண் சிதையாதபடி உழிஞையாரொடு பொருத பெருஞ்சிறப்பைக் கூறுதல்'ஊர்ச்செரு' வென்றும், எயில் காக்கும் முனைப்புடன் பொருது செருக்களத்தில் உயிர் துறத்தல் 'செருவிடை வீழ்த' லென்றும் அறிதல்வேண்டும். மதிற்சுவர்களின்மேற் பாயுங் குதிரைப்படைகளின் சிறப்பைக் கூறுதல் 'குதிரைமற'மாம். மதிலிடத்திற் போர் புரிதல் 'எயிற்போ' ராகும்; அப்போரிடையே நொச்சியார் சாய்ந்து பட்டு எயிலழிதல் 'எயிறனை யழித்த' லென்க. அங்ஙனமாயினும் நொச்சி வீரர் உறுதி தளராமல் எஞ்சிய படைகளைத் திரட்டி முனைந்து பொருது எயில் காத்தல் 'அழிபடை தாங்க' லெனப்படும். உழிஞை மறவர் வெற்றியுற்றமையால், அவர் நொச்சி மறவர் மகளை மணம் புரிதற்குவேண்ட, அதற்கு அவ் வரணகத்து வீரர் மறுத்து மொழிதல் 'மகண்மறுத்து மொழித' லெனப்படுகின்றது.

மேற்காட்டிய இத்தனைத் துறைகளும் நொச்சியரசற்குச் சிறிதும் வெற்றியைக் கூறுமற் பெரும்பான்மையும் அழிவையுந் தோல்வியையுமே நன்கு விளக்குதல் தெற்றெனப் புலப்படும். இவ்வுண்மையைக்,

'காப்புடைப் புரிசை புக்குமாறு அழித்தலின்
ஊர்ப்புறங் கொடா நெடுந்தகை
பீடுகெழு சென்னிக் கிழமையு நினதே'*

என்னும் புறநானூற் றடிகளும் நன்கு விளக்கின. ஆதலாற்றான் ஆசிரியர் தொல்காப்பியனார் நொச்சியொழுக்கத்துக்குத்தோல்வியையேயேற்றி 'அகத்தோன் வீழ்ந்த நொச்சியும்' என்று ஒரே துறைத் தொடரில் அடக்கி அவ்வளவோடு நொச்சி யொழுக்கத்தைக் கூறி முடித்துவிட்டார். எனவே புறப்பொருள் வெண்பாமாலையின் நொச்சிப்படலமும், அப் படலப்பாட்டுகளும் தொல்காப்பியனார் காட்டிய ஒரே தோல்வித்துறையில் அடங்கிவிட்டன வென்க. நுணுகி நோக்கினால், ஒரு துறையென வெடுத்துக் கூறுதற்குந் தொல்

* புறநானூறு, ௨௪௨

காப்பியர் இசைவுக்கு இடமுந் தகுதியும் பெறும் முதன்மையில் நில்லாத நொச்சி யொழுக்கத்தை ஐயனாரிதனார் ஒரு திணையெனவே யெடுத்து விளக்கலுற்றது, உலக வியற்கை உள்ள வியற்கைகளின் பயனான நூன் முறை யழகுக்கு உண்மையில் வேறாவதொன்றேயாம். இனி இத்திணைக்கட் காணப்படும் 'மகண் மறுத்து மொழித' லென்னுந் துறைப்பொருள் 'மகட்பாற் காஞ்சி' யோடு ஒருபுடை யொத்து நிற்றலின், அது 'காஞ்சித்திணை'க் கட்டுரையில் விளங்குதற் கிடம்பெறும். ஆதலின் அதனை அங்குக் கண்டுகொள்க.

இனி இங்கு ஆராய்தற்குரியது, இந்நொச்சி யொழுக்கம் உள்ளிட்ட புறத்திணை உழிஞைக்கும் அகத்திணை மருதத்துக்கும் உள்ள ஒற்றுமை நுணுக்கமாகும். புறப்பொருள் உழிஞைக்கும் அகப்பொருண் மருதத்திற்கும் உரிய இடம் மருத நில மென்பது. உழிஞை யொழுக்கம் நிகழுமிடமான அரசனது அரண், வயலும் வயல் சார்ந்த இடமுமான மருத நிலத்தின்கண்ணதாதலைப்

'பிணங்குகதிர்க் கழனி நாப்பண் ஏமுற்று
உணங்குகலன் ஆழியின் தோன்றும்
ஓர் எயில்*'

என்று புறநானூற்றுள் வரும் ஆசிரியர் குன்றூர்கிழார் மகனார் பாட்டினால் அறிந்துகொள்க. இதன்கண் அவ்வாசிரியர், பச்சைப் பசேலெனப் பயிர் பரந்த கழனிகளின் நடுவில் அமைந்திருக்கும் அரசனது கோட்டையரணுக்கு, நீலப்பாயலை விரித்தாற் போன்ற நீர்ப்பரப்பினை யுடைய கடலின் நடுவிடத்ததான கப்பலை உவமை காட்டி மிகவுந் தெளிவாய் விளக்கியிருப்பது நினைவிற் பதிக்கற்பாலது.

ஆசிரியர் தொல்காப்பியர் 'வைகுறுவிடியல் மருதம்' †என்று மருதத்துக்கு விடியலையே பொழுதாக ஆணைதருவர். கறுவுமேற்கொண்டு பகைமேற் சென்ற வஞ்சிமன்னன் இரவெல்லாம் பாசறையிற் றங்கியிருந்து விடியற்காலையிற் போர்க்கெழுந்து மதின்முற்றுவானாதலின், புறப்பொருள் உழிஞைக்கும் பொழுது விடியலாதல்

---

* புறம், ௩௩௮.

கண்டு கொள்க. இவ்வுண்மையை 'மருதத்திற்கு இது புறனாய வாறு என்னையெனின், வஞ்சியிற் சென்ற வேந்தனொடு போர் செய்தலாற்றாது உடைந்த மாற்று வேந்தன் அரண் வழியாகப் போர் செய்யுமாதலானும், அஃது அவர் நாட்டகத்தாகலானும், அவ் வழிப்பொருவார்க்கு விடியற்பொழுது காலமாகலானும் அதற்கு அது புறனாயிற்றென்க'* என்று ஆசிரியர் இளம்பூரணர் தமதுரையிற் றெளிவாய் விளக்குதலின் வைத்தும் இனிதறியப்படும். இனிப் பூவென்னுங் கருப்பொருளும் இவ் வகைப்புறத் திணைகட்கு ஓரினமுடையனவேயாம். மருதத்திணை யொழுக்கத்தில் தலைவனுந் தலைவியும் ஆண்டுப் பயன்படுத்துவன தாமரையுஞ் செங்கழுநீரும் முதலான மருத நிலத்துப் பூக்களாகும். இங்ஙனமே உழிஞை யொழுக்கத்துக்கும் அதன்கண் அடக்கப்படும் நொச்சி யொழுக்கத்துக்கும் அரசர் அணியும் உழிஞைத்தழையும் நொச்சிப்பூவும் மருத நிலத்தனவேயாயின. உழிஞைப்பூடும் நொச்சிச்செடியும் மருத நிலத்தின்கண்ண வென்பது முறையே 'பொலங்குழை யுழிஞையொடு பொலியச் சூட்டி'† யென்னும் புறநானூற்றடியி னுரையில் உரையாசிரியர் 'உழிஞை, கொற்றான்' றென்றுரைத்தலானும்,

> 'நீரற வறியா நிலமுதற் கலந்த
> கருங்குர னொச்சி'‡

என்னும் புறநானூற்றடிகளில் வெறிபாடிய காமக்கண்ணியார் நொச்சி நீர்வளமிக்க மருத நிலத்தில் விளைவதாமென் றுரைத்தலானுந் தெளியப்படும்.

இனி உரிப்பொருள் நிகழ்ச்சியினும் இவ்வகைப் புறத்திணைகள் மிகவும் ஒற்றுமையுடையனவாய் விளங்குகின்றன. அகப்பொருண் மருதத்துக்கு உரிப்பொருள் ஊடலென்று நிறுத்தினார் ஆசிரியர் தொல்காப்பியனார். தலைமகன் இரவெல்லாம் பரத்தையர் சேரியனாய்ப் பொழுது கழித்து விடியற்காலையிற் றலைமகள் வாயிலை அண்மி உட்செல்ல விழைந்தானாக, அஞ்ஞான்று தலைமகள் அவ்விரவு முழுதும் அவனைப் பிரிந்திருந்த பிரிவாற்றாமையினால் உள்

---

* தொல், புறத், அ. † புறம் ௫௰ ‡ புறம், ௨௭௧

ளங் கவன்று ஊடற் குறிப்பினளாய் வாயிலடைத்துக் கொண்டு உள்ளிருப்பள். இங்ஙனமே புறத்திணை யுழிஞையிலும் அரண்புறத் தரசன் உள்ளிடத்தைக் கதுவ விழைகின்றனனாக, அகத்தரசன் அதற்கு மறுத்து வாயிலடைத்துக்கொண்டு உள்ளிருக்கின்றனன். இன்னும் இல்லகத்திருந்த தலைவி வாயிலடைத்துக்கொண் டிருந் தனளேனும் உற்ற நேரங்கண்டு வாயிலைத் திறந்து தன் றலைவ னோடு ஊடற்போர் புரியவே விழைகின்றமைபோல, வாயிலடைத் கொண்டிருக்கும் அரணகத்தரசனும் உற்றநேரத்தில் வாயில் திறந்து வெளிப்பட்டுப் புறத்தானொடு பொருதல் செய்யவே விரும்புகின்றான். 'ஒருவன் வாயில் வேண்டத் திறவாது அடைத் திருந்த ஒப்புமையானும், உள்ளிருந்தவனும் புறப்பட விரும்புத லானும் உழிஞை மருதத்திற்குப் புறனாயிற்றென்றார் **நச்சினார்க் கினியரும்.** ஆகவே இவ்வாற்றாலெல்லாம் புறத்திணை உழிஞைக் கும் அகத்திணை மருதத்துக்கும் உள்ள ஒற்றுமை நுணுக்கம் இனிது விளங்குதல் காண்க.

இனிச் சற்று நுணுகி நோக்குவார்க்கு வயலும் வயல்சார்ந்த ஊரிடமுமாகிய மருதநிலத்தில் மண்முதலான ஐம்பொருள்களிலுந் தீயின்முனைப்பே நன்றாய் விளங்கித் திகழுமென்க. ஆற்றன்று, **ஆசிரியர் தொல்காப்பியனாரே** மருத நிலத்தைப் 'புனலுலக'* மெனக் கூறினராலெனில், அவர் முகில் வேந்தனை முதன்மையாய் வைத்து அவ்விடத்து நீர்வளத்தைக் குறித்தற்கே அங்ஙனங் கூறி னமையின், அதனால் ஈண்டைக்காவதோ ரிழுக்கேதுமில்லை யென் றறிந்து கொள்க. மருதநிலத்தின் றோற்றமெல்லாம் பெரும்பான்மை யும் விளைச்சலாகும். அதுவேயுமன்றிக் குறிஞ்சி முல்லை முதலான ஏனை நான்கு நிலங்களையும் விட இந்நிலத்தின் மட்டுமே அறிவான் மிக்க மக்கள் நெருங்கி யுறைந்து தொழிலியற்றும் உலக முயற்சி கள் செவ்வையாய் நிகழப்பெறுகின்றன. ஆதலால், ஏனையெல்லா நிலங்களைக் காட்டிலும் மருத நிலத்தின்கண்ணே இயற்கையுஞ் செயற்கையுமான தொழின் முறைகள் தோன்றுதலும் நிகழ்தலும் அழிதலுஞ் சிறப்பாக நிகழக்காண்கின்றோம். எனவே தோற்ற

* தொல், அக, ௫

நிகழ்ச்சியிறுதிகளெனப்படும் இம்முத்தொழில் நிகழ்ச்சிகளும் மருத நிலத்திற்கே சிறப்பினுரியவென் றறிந்துகொள்க.

ஒரு பொருளைத் தோற்றுவதும் அதைச் சிலகாலம் இருத்துவதும் பின்னர் அழிப்பதுமான இம் முத்தொழில்களை யும் நிகழ்த்துவது, மண் முதலான ஐம்பொருள்களிலுந் தீப் பொருளொன்றே யாகும். இத் திறத்தில் நீரும் வல்லதெனினுந், தீயே அதனினும் மிக்க ஆற்றலுடையதாய்த் திகழ்கின்றதென்க. தீப்பொருள் முனைந்து இம் முத்தொழில்களைச் செய்யா நிற்ப, நீர் அதற்கு உதவியளவாய்மட்டும் நின்று பயன்படா நிற்கின் றது. நீரின் வல்லமை அவ்வளவே யாதலின், தீப்பொருட்கே இம் முத்தொழில்களையும் நன்காற்ற வல்ல இயற்கைத் திறமும் முதன்மையும் மிகுதியுமுண்டென் றறிதல்வேண்டும். மக்கள் தாய்வயிற்றிற் கருவாயிருக்குங் காலத்தில் தீயே முதன்மையாய் நின்று அதனை உருவாக்கித் தோற்றுகின்றது. பெட்டைப் பற வைகள் அடைகாத்துக் குஞ்சுபொரித்தலும் ஈண்டு நினைவு கூரற்பாலது. பின்னர் மண்ணிடையிற் பிறந்து உயிர் வாழுங் காலத்திலுந் தீயே முதன்மையாயும் உறுதுணையாயும் நின்று மக்களைக் காப்பாற்றுகின்றது. இறுதியில் இறக்குங் காலத்தி லும் அதுவே முனைந்து நின்று அழித்தொழிக்கின்றது. இவ் வியற்கை நுட்பங்களை ஆராய்ந்து இனிதுணர்ந்து கொண்ட மையாற்றான் நந் தமிழ்ப் பெருஞ் சான்றோர்கள் தீயின் இயல் பினுய் நின்று இவ்வுலகத்தை அழிக்குங் கடவுளே மீண்டும் அதனைப் படைக்கவுங் காக்கவும் உரியவ னென்றும், அவன் தீவடிவினனேவே இருத்தல்வேண்டுமென்றும், மிகவும் ஆழ்ந் தகன்ற நுட்பவறிவினால் நுணுகி யறிந்து கடவுளுண்மை தேறு வாராயினர். இன்னும் இவ்வுண்மை நுணுக்கங்களை யெல்லாம் சிவஞானபோதம் முதலான மெய்யறிவு நூல்களிற் பரக்கக் கண்டுகொள்க.

"அறுதியில் அரனே எல்லாம் அழித்தலால் அவனால் இன்னும்
பெறுதும்நாம் ஆக்க நோக்கம் பேரதி காரணத் தாலே *

* சுபக்கம், க:ருடு.

என்னுஞ் சிவஞான சித்தியார் அருண்மொழி இங்கு மிகவும் நினைவுகூரற்பாலது.

இவ்வாறு மருத நிலத்தின்கண் தீப்பெர்ருளொன்றே முளைத்து விளங்குமெனக் காண்டலால், இனி அத் தீயினியல்பே அகப்பொருண் மருதத்துக்கும் புறப்பொருளுழிஞைக்கும் இடனாதல் வேண்டும். தீயினியல்பை 'வெம்மை' யென்று ஆசிரியன்மார் கூறுப. மருத வொழுக்க மென்பது ஊடல்; எனவே தலைவி வெம்மையுடையளாய் நின்று தன் றலைவனோடு ஊடுகின்றமை வெம்மை யொழுக்கமே யாகின்றது; இங்ஙனமே புறப்பொருட் கண்ணும் உழிஞை யரசனும் நொச்சி யரசன்பால் வெம்மையுடையனாய் மதின் முற்றுதலின், அவனொழுக்கமும் வெம்மை யொழுக்கமேயாதல் கண்டுகொள்க. அவ்வாறாயின் வெட்சி யொழுக்கம் முதல் இவ்வுழிஞைகாறுங் கூறப்பட்டனவுந், தும்பை யொழுக்கம் முதலாக இனிக் கூறவிருப்பனவுஞ் சினக்கொதிப்பாகிய வெம்மையினாலேயே நிகழ்வனவாய்க் காணப்படா நிற்பவும், நீவிர் வெம்மையியல்பை இவ்வுழிஞை யொழுக்கம் ஒன்றற்கு மட்டுமே ஏற்றிக் கூறுதல் என்னை யெனின், நன்று, புறப்பொருளொழுக்கங்கள் எல்லாவற்றிலும் இவ்வுழிஞை யொழுக்கம் ஒன்றுமே இளைத்தார்மேற் காட்டும் வெம்மை யொழுக்கமாய் விளங்கா நிற்கின்றது. ஏனையவெல்லாம் ஒத்தார்மேற் காட்டும் வெம்மையவா மென்க. இளைத்தார்மேற் செல்லும் வெம்மையே வேறுபாடு விளங்க வெம்மையென விளங்கித் தோன்றுவதாமல்லது ஒத்தார்மேற் செல்வது அங்ஙனமாகாது. நொச்சியரசன் போர்செய்த லாற்றாது படை தளர்ந்து உதவியற்று இளைத்து அரணுதவியை நாடினனாதலின், அவன் உழிஞையார்க்கு இளைத்தவனே யாவன். அதனாற்றான் அவன் அரணினின்றும் வெளிப்பட்டு உழிஞை யரசனோடு படைவலிமையில் ஒத்துப் போர்புரிந்து வெற்றியடைதல் இனி மிகவும் அருமையா மென்று மிகப் பழைதான தொல்காப்பியம் முதலாக எல்லாப் பொருளிலக்கண நூல்களும் ஒத்துக் கருதின. ஆகவே ஓர்ரசன் புறத்தாரை எதிர்க்கு நோக்கஞ்

சிறிது மின்றி அரணகத்தைக் காத்துக்கொள்ளு நோக்க மொன்றே யுடையனாய் வெம்மைத் தன்மையில் அளவு குறையா நிற்ப, மற்றுப் புற முற்றி யிருக்கும் ஏனையோ ரரசன் தன்னைக் காக்கு நோக்கஞ் சிறிதுமின்றி அகத்தாரை எதிர்க்கு நோக்கமே மேற்கொண்டு வெம்மையில் அளமிகா நிற்பன். ஆதலால், வெட்சி முதலாக வரும் ஏனையெல்லாப் புறத்திணை யொழுக்கங்களினும் இவ்வுழிஞை யொழுக்கத்தின் மட்டுமே வெம்மை யியல்பு வேறுபாட் டுண்மையினால் நன்றாய் விளங்கித் தோன்றுவதாமென் றறிந்து கொள்க. இங்ஙனமே இதன் அகத்திணை யொழுக்க மெனப்படும் ஊடல் நிகழ்ச்சியிலும் தலைவன் தன் றலைவிக்கு இளைத்த நிலையில் முகநோக்கி நிற்றனாகத் தலைவி அவன்மேல் வெம்மையுடையளாய் ஊடல் நிகழ்த்துத லும் இங்கு இனப்படுத்தி உற்றுநோக்கற்பாலது.

தீயின் வெம்மை விளக்கத்தைப் புலனறிவது கட்பொறியா தலின், ஊடற்போரிலும் மதிற்போரிலும் மெய் முதலான ஏனை நாற்பொறிகளினுங் கட்பொறியே மிகவும் பயன்பட லாயிற் றென்க. ஊடலொழுக்கத்தில் தலைவன் தன் றலைவியை அருகில் அணுகானாகவே அவனுக்கு மெய்யும் வாயும் மூக்கும் ஆண்டுப் பயன்படா. செவி சிறுகவே பயனும். எனவே கட் பொறியே தலைவியின்கண் உருத்தெழுந்த வெம்மை விளக்கத் தைக் காண்டலில் அவனுக்கு மிகுதியும் பயன்படுமென்க. இங் ஙனமே உழிஞை யொழுக்கத்திலும் அரசர் ஒருவரை யொரு வர் அணுகிப் பொருதற் கியலாதவாறு இடையே அரண் அமைந்திருத்தலின், அவரிடையே வெம்மை விளக்கத்தை யறிந்து கொள்ளற்குக் கட்பொறியே மிக்குப் பயனுமென் றறிந்து கொள்க. ஒளி யென்பது வெம்மை யியல்பினதாத லின், அதனை யுணரும் பொறி கட்பொறியேயாகும். மெய்ப் பொறியினாலு முணரலாமெனின், அற்றன்று, வெம்மையியல் பின் பெருக்கத்தையே அஃது ஒரு சிறிது ஊறியறிய வல்லதா மல்லது, மற்றதன் நுணுகமான விளக்கத்தை அறியமாட்டாதா மென் றுணர்க. மேலும், மேன்மை வன்மைகளைத் தொட்டறி

தலே மெய்ப்பொறியி னியல்பாகு மென்பதும் ஈண்டறியற் பாலது.

இனித் தீயின் முனைப்பியல்பு பொருள்களின் அணுக் களைப் பிரிப்பதாகும். உழிஞை யொழுக்கத்திலும் ஊட லொழுக்கத்திலும் அகப்பொருட்டலைவரும் புறப்பொருளரச ருந் தத்தமக்குட் பிரிவு தோன்ற நின்றொழுகலை அறிந்து கொள்க. மேலும், புறப்பொருளரசனும் அகப்பொருட்டலைவி யும் வெம்மையுடையராய் ஒழுகலின், அவர் மாட்டும் அவர்க் கெதிராவார் மாட்டும் இயற்கையே புணர்ந்து கிடக்கும் அறி யாமை யென்னும் பழமலம் அவ்வெம்மையி னியல்பினாற் றுக ளாக்கப்பட்டு விலகலின், அவ்வாற்றால் அவர்க்கு உயிரறிவு நனிபெரிதும் விளங்கா நிற்கும். இக்கட்டுகளும் எதிர்ப்புகளு மான வெம்மைகள் மக்கட்கு அவர்தம் வாழ்விடையே அடிக் கடி தோன்றுதலாற்றான், அவ்வெம்மையி னியல்பாற் பழமலம் வலிகெட்டுப் பிரிந்துபோக, அவர்க்குப் பேரறிவு விளக்கமாகின் றது. இவ்வியற்கை நுணுக்கத்தை இனிதுணர்ந்தே பேரறிவு சான்ற எம் செந்தமிழ் முதுமக்கள் இறைவனைத் தீயுருவின் வழியாய் வழிபட்டுத் தம் மலமிரியப் பெற்றுப் பண்டு தொட் டே அறிவு விளங்கி வந்தன ரென்க. அறிவுக்கு ஒளியினை யேற்றி அறிவொளி' யென்றும், 'அகக்கண்' என்றுங் கூறுந் தமிழ் வழக்கும் இவ்வுண்மைகளை யெல்லாம் மெய்ப்பியா நிற்கும்.

மேலும், புறப்பொருளொழுக்கங்கள் பலவற்றுள்ளும் இவ் வுழிஞை யொழுக்கம் ஒன்று மட்டுமே அறிவின்றிறம் மிக்கு விளங்கப் பெறுவதாகும். வெட்சியுங் கரந்தையும் வஞ்சியுந் தும்பையும் வாகையு மெல்லாம் பெரும்பான்மையும் ஊக்கத் தினாலும் உடம்புறுதியினாலும் நடைபெறுவனவா மெனவும், மற்றிவ் வுழிஞை யொழுக்க மொன்றுமே பெரும்பான்மையும் அறிவின் றிறத்தால் நடைபெறுவதா மெனவும் பகுத்தறிந்து கொள்ளல் வேண்டும். பகைவர் அணுகுதற் கியலாதவாறு நீரரண் நிலவரண் மலையரண் காட்டரண் என்னும் நால்வகை

யரண்களையுஞ் சூழ்ச்சிகளும் வஞ்சனைகளும் வாய்ப்ப அமைத்து, அவற்றினடுவில் வலிமை சான்ற மதிலரணங்கள் பலவுங் கோட்டைகளும் எழுப்பிப் பல்வேறு வகையான போர்ப்பொறிகளையுங் கருவிகளையும் ஆண்டு நிறுத்தி, எத்தனை நாட்களேயாயினும் அங்குநின்றும் புறம்படாது தனி வாழ்க்கை செலுத்தும் அருநிலையுடையராய் அகத்தரசர் புறத்தரசரொடு பொருதலும், இங்ஙனமே புறத்தரசரும் மேற்காட்டிய அணுகற்கருமையான இத்தனை இடையூறுகளையுந் தப்பி அவ் வலிய அரண்களையும் அழித்து அகத்தரசனைக் கைப்பற்றுதலும் எத்துணை ஆன்ற அறிவின் திறத்தால் நடைபெறல் வேண்டும்! மக்களின் அறிவு விளக்கமே குறிஞ்சி முல்லை முதலான ஏனை நிலங்களைக் காட்டிலும் மருத நிலத்தின்கண்ணேயே அவர்தம் வாழ்விடங்களாலும் வாழ்முறைகளாலும் நன்கு விளங்கப் பெறுகின்ற தென்றறிந்து கொள்க.

இனி அகப்பொரு ளொழுக்கத்தின்கண்ணும் ஏனைய முறைகளெல்லாம் உடம்பின் றொடர்பால் இன்பம் விளைப்பனவாக, ஊடன் முறைமட்டும் அறிவுப் போரினால் இன்பம் விளைவியாநிற்கின்றமையும் இங்கு நினைவுகூரற்பாலது. எனவே, உழிஞையாலும் ஊடலாலும் புறப்பொருளரசரும் அகப்பொருட்டலைவரும் பயின்று பெறுமியல்பு அறிவேயா மென்பது நுண்ணுணர்ந்து தெளியப்படும்.

இவ்வாற்றாற், புறப்பொருளுழிஞையும் அகப்பொருண் மருதமும் அகம்புறமாய் இயையுமாறும், தீப்பொருளின் இயல்பான உழிஞையெனும் வெம்மையுணர்ச்சி, கட்பொறி கொண்டு ஒளிகாணுஞ் செயலால், மருத மென்னும் அறிவின் றிறமாய் நுணுகியமையுமாறும் இனிது விளங்கா நிற்குமென்க.

திருப்பாதிரிப் புலியூர்

சைவர் மகாநாடு

திருவருளால் இம்மகாநாடு மிகச் சிறப்பாகத் திருப்பாதிரிப்புலியூரிற் சுக்கில, வைகாசி, ௩-ம் நாள் (16-5-1929) முதல் ஆறு நாட்கள் வரையில், அன்பு அறிவு ஒழுக்கங்களும், பன்மொழிப் புலமை சைவசமய ஆராய்ச்சி முதலியவைகளும் ஒருங்கமைந்து அறிவு ஞாயிறாய் விளங்கும் மறைத்திரு மறைமலையடிகள் தலைமையில் நிகழ்ந்தது. அஞ்ஞான்று மக்கட்குரிய நல்லியல்புக ளெல்லாவற்றிலுந் தலைசிறந்து சமயப்பெரியாராய் விளங்கும் சைவத்திரு ஞானியாரடிகள் உடனிருந்து மகாநாட்டை நன்கு நடத்தி வைத்தார்கள். தென்னாடு முழுமையிலும் சைவ அவைகளின் உறுப்பினராய் நூற்றுக்கணக்கான பேர் வந்திருந்தனர். அரிய விரிவுரைகள் பல நாடோறும் நிகழ்ந்தன. திருநெல்வேலித் தீர்மானங்கள் செவ்வையான முறையில் திருத்தப்பட்டு ஏதொரு குறைபாடு மில்லாமல் இம்மகா நாட்டில் நிறைவேற்றப்பட்டன. அவ்வுண்மைகளுந் தீர்மானங்களும் பின் வருமாறு:—

உண்மைகள்

1. நல்லொழுக்க வாழ்க்கைக்குக் கடவுள் உண்டென்னுங் கொள்கை இன்றியமையாதது.

2. சைவ சமயம் அறிவு ஆராய்ச்சிக்குப் பொருத்தமுள்ளதாயும், அன்பு நெறியினையே அடிப்படையாகக் கொண்டதாயும் இருத்தலின், அஃது எக்காலத்துக்கும் எச்சமூகநிலைக்கும் இசைந்ததா யிருக்கின்றது.

3. பதி, பசு, பாசம் (இறை, உயிர், தளை) என்னும் முப்பொருள் உண்மையையும், அப்பதி சிவமே யென்பதையும் கடைப்பிடித்தல் சைவ சமயத்தின் இன்றியமையாத கோட்பாடாகும். சைவ உணவு கொள்ளுதல் சிவ சின்னங்கள் அணிதல் என்பவற்றோடு சரியை, கிரியை, யோகம், ஞானங்களில் அக்கோட்பாடுகட் கிசையப் பயிலுதல் சைவசமயத்தின் இன்றியமையாத அநுட்டானமாகும்.

4. சைவ சமயத்துக்குப் பிரமாண நூல்களாவன பன்னிரு திருமுறைகளும் பதினன்கு மெய்கண்ட சாத்திரங்களும் அவை களின் கருத்துக்கு மாறுபடாத வேத சிவாகமப் பகுதிகளும் ஆகும்.

5. சைவ சமயிகள், சைவசமயக் கோட்பாடுகளையும் அனுட் டானங்களையும் மறுக்காத எவ்வித ஆராய்ச்சியுஞ் செய்தல் சைவசமய விரோதமாகாது.

தீர்மானங்கள்

1. சைவ சமயிகளும் பிறருஞ் செய்யும் சமய ஆராய்ச்சி களின் முடிபுகள் ஒப்புக்கொள்ளத் தக்கனவா அல்லவா என்று தீர்மானித்தற் பொருட்டுத் தனிக்கழகம் ஒன்றுநிறுவி அதற்குரிய சைவ அறிஞர்களைச் சைவசித்தாந்த மகா சமாஜத்தார் ஆண்டுதோ றும் தெரிந்தெடுக்க வேண்டும்.

2. சைவ சமயிகள் கடவுள் உண்டென்னும் கொள்கையைப் பாதுகாப்பதிலும் அக்கொள்கை யுடையாராய்ப் பொதுநலங் கருதிய அருளொழுக்கத்தைப் பரப்புவதிலும் தம்மோடு இணங்கி வரும் ஏனைச் சமயிகளோடு ஒத்துழைத்தல் வேண்டும்.

3. சைவ சமயமானது பிற சமயங்களைச் சோபானமுறை யில் தழுவுவதால், சைவசமயிகள் பிற சமயிகளோடு சகோதரத் துவம் பாராட்டவேண்டும்.

4. சைவ சமயிகளுள் சைவ ஆசாரமுடைய எம்மரபினர்க் கும் ஆலய வழிபாடுமுதலிய சமய உரிமைகள் சமமாயிருத்தல் வேண்டும்.

5. ஆலயத்திற் சென்று வழிபடும் மக்கட்குக் கடவுள் சந்நிதி யில் எவ்வகையான உயர்வு தாழ்வுகளும் பாராட்டப்படுதல் கூடாது.

6. பிற சமயத்தினர் சைவசமயக் கோட்பாடுகளையும் அனுட் டானங்களையும் ஒப்புக்கொண்டு சைவசமயம் புகும் தமது விருப்

பத்தை ஒரு சைவ சபையாருக்கு எழுத்துமூலமாய்த் தெரிவித்தால், அச் சைவ சபையார் அவ்வறிவிப்பைப் பதிவு செய்துகொண்டு திருநீற்றுப் பதிகத்தையும் பஞ்சாக்கரப் பதிகத்தையும் ஓதுவித்துத் திருநீறு அணிவித்து அவர்களைச் சைவ சமயத்தி[ல்] சேர்த்துக்கொள்ளவேண்டும். அவர்கள் சமய உரிமை[கள்] அனைத்துக்கும் உரியராவார்கள்.

7. சைவசமய வளர்ச்சிக்குக் கீழ்க்கண்ட வழிகளைப் பின்பற்றி உழைத்தல்வேண்டும்.

(க) சைவ கலாசாலை ஏற்படுத்திச், சைவசமய போதனை செய்வதற்குரிய பிரசாரகர்களைப் பயிற்றுதல்.

(உ) அப் பிரசாரகர்களுக்குக் கோயில் மடங்கள் பெருஞ் சைவ சபைகள் செல்வர்கள் முதலியோர்களால் தகுந்த சம்பளம் அல்லது ஊதியங் கிடைக்கும்படி செய்தல்.

(ங) ஆங்கிலத் தமிழ்க் கல்லூரிகளில் அதிகாரிகளிடம் அனுமதிபெற்றுச் சைவசமய மாணவர்க்குச் சைவசமய போதனை செய்வித்தல்.

(ச) சமய நூற் பரிசோதனைகள் நடத்துதலும் தேறியவர்களுக்குப் பரிசளித்தலும்.

(ரு) சைவ சமய உண்மைகளை விளக்கும் துண்டுப்பத்திரிகைகள் வெளியிடுதல்.

(சு) தக்க புலவர்களைத் தெரிந்தெடுத்து அவர்கள் கூடிய கழகவாயிலாகச் சைவசமயக் கோட்பாடுகளும் அனுட்டானங்களும் யாவர்க்கும் எளிதாய் நன்குவிளங்கும்படி உரைநடை நூல்களை வெளியிடுதல்.

(எ) சைவ சமய உண்மைகளை அறிவியல் நூற் கருத்துக்களோடும் பிற சமயக் கருத்துக்களோடும் ஒத்துப் பார்த்து ஆராய்ச்சி செய்யும் சைவப் புலவர்களை ஆதரித்தல்.

(அ) ஆங்கிலத்தில் ஒரு மாதாந்தப் பத்திரிகை நடத்துத லோடு சைவம் விளக்கும் பத்திரிகைகளையும் ஆதரித்தல்.

(கூ) பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட சைவ சமயிகள் ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு சைவ சபையின் உறுப்பினரா யிருத்தல்.

(அ) நம் சமய குரவர்களையும், அவர்கள் அருளிய நூல்களையும் பல்வேறு வழிகளிலும் தூற்றிவரும் வகுப்பினரால்நடத்தப்படும் பத்திரிகைகளையும் இயக்கத்தையும் சைவசமயிகள் எவ்வகையிலும் ஆதரித்தலாகாது.

திருக்கோயில்களில் அடியிற்கண்ட சீர்திருத்தங்கள் விரைவில் நிறைவேறுதற்கான முயற்சிகளைத் தொடங்கல்வேண்டும்.

(க) ஆதிசைவர்கள் முதலாகப் பூசனை புரிவோர்கள் சைவ சமய உணர்ச்சி உண்டாதற்குரிய பிராமண நூல்களைப் பயிலுமாறு செய்தல்.

(உ) அவர்கட்குத் தகுந்த சம்பளம் அல்லது ஊதியம் கிடைக்கும்படி செய்தல்.

(ங) சைவ சமயிகளைக் கொண்டே சிவாலயங்களில் வேத பாராயணம் முதலிய தொண்டுகள் அனைத்தையும் செய்வித்தல்.

(ச) ஆசாரியாபிஷேகம் பெற்ற ஆதிசைவர்கள் கிடையாதவிடத்து ஆசாரியாபிஷேகம் பெற்ற ஏனைச் சைவ சமயிகள் வாயிலாகப் பூசனைகளை நடத்துதல்.

(ரு) ஒவ்வொரு சிவாலயத்திலும் பன்னிரு திருமுறைகளைப் பூசனை காலங்களிலே முறையாக ஓதுவித்தல்.

(சு) ஆலயங்களில் நுழைந்துள்ள பிரவேசக் கட்டணம் முதலிய வழிபாட்டுத் தடைகளை நீக்குதல்.

(எ) சைவசமயக் கொள்கைகட்கும் சிவாகம விதிகட்கும் முரணுகாத முறையில் நித்திய நைமித்திய பூசைகளை நடத்துவித்தல்.

(அ) திருவிழாக்களிலே பக்தி ஞானங்களைக் குன்றச் செய்யும் வீணாடம்பரச் செலவுகளை நீக்கிச் சிவத்துவம் விளங்குதற்குரிய திருமுறைப் பாராயணம் சமயப் பிரசங்கம் சைவ அறிஞர் கூட்டம் முதலியவைகளையே நிகழ்வித்தல்.

(கூ) சிவாலயங்களிலே தேவதாசிகட்குப் பொட்டுக் கட்டுதலையும் அவர்கள் ஊழியத்தையும் ஒழித்தல்.

(ய) திருக்கோயில்களிலும் தேர்களிலும் இப்பொழுது உள்ள இழிவான சிற்பங்களை ஒழித்தல்.

(கக) சைவ சமய அறிவும் பற்றும் உடையவர்களையே கோயில் அதிகாரிகளாக நியமிக்கும்படி ஏற்பாடு செய்தல்.

(கஉ) திருக்கோயில்களிலே திருக்குளம் முதலிய எவ்விடத்தையும் சுத்தமாக வைத்தல், புனிதத்திற்கும் பக்திக்கும் இடையூறாகிய கடைவைத்தல் முதலிய தீய வழக்கங்களை ஒழித்தல்.

(கங) நித்திய நைமித்திய பூசனைமுதலியவற்றிற்குரிய செலவுகள் நிகழ்ந்தபின் எஞ்சிய நிதியினைக்கொண்டு சமயப் பிரசாரகர் நியமனம், சைவ நூல் புத்தகசாலை, தேவார பாடசாலை, ஆகம பாடசாலை முதலியவற்றை ஏற்படுத்துதல். சிவாலய நிதியினைக் கொண்டு பிற சமயக் கல்விக்குப் பயன்படுத்தாதிருத்தல்.

(கச) திருக்கோயில்களிற் செய்யப்படும் வடமொழித் தென்மொழித் தோத்திரங்கள் அனைத்தும் சிவத்தையும் சிவமூர்த்தங்களையும் குறித்தனவாகவே இருக்கும்படி ஏற்பாடு செய்தல்.

(கரு) திருக்கோயில்களில் நடைபெறும் திருவிழாக் காலங்களில் இறைவன் திருவீதி வலம் வரும்போது தமிழ்வேத பாராயணத்தை இறைவனுக்கு முன்னர்ச் செய்துபோகும்படி செய்தல்.

10. ஆடவர்க்கும் பெண்டிர்க்கும் சமயவிஷயங்களிலே சம உரிமையும் கடமையும் உள்ளன.

11. உயிர்ப்பலி நிறுத்துதல் கொலைமறுத்தல் முதலிய அரு

ளொழுக்கக் கொள்கைகளை (Vegetarianism) யாண்டும் பரவச் செய்தல் சைவ சபைகளின் கடமையாகும்,

12. துறவுகோலம் பூண்டார்க்குச் சமயக்கல்வி பயிற்று வித்து அவர்களை ஆதரிப்பதுடன், அவர்கள் வாயிலாகச், சமய போதனை செய்விக்கும் பொருட்டும், சைவ சமய வளர்ச்சிக்குரிய எல்லா முயற்சிகட்கும் பொருளுதவி ஆதரித்தற் பொருட்டும், செல்வ மிக்க சைவ மடங்களின் தலைவர்களை வேண்டிக் கொள்வ தற்குத் தக்க அறிஞர்கள் சிலரைச் சைவசித்தாந்த மகா சமாஜத் தார் விரைவில் தெரிந்தெடுத்து அம் மடாதிபதிகளிடம் அனுப்ப வேண்டும்.

13. சைவ சித்தாந்த மகா சமாஜத்தை இந்நாட்டிலுள்ள சைவ மக்கட்கெல்லாம் பொதுவாகிய சைவப்பெருஞ் சபையாகக் கொள்ளவேண்டும், ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஒவ்வொரு தாலூகாவிற்கும் ஒவ்வொரு ஊரிற்கும் தனித்தனி சைவ சபைகள் அமைக்கப் பெறுதல் வேண்டும்.

14, ஒவ்வொரு சைவ சபையும் சைவசித்தாந்த மகா சமாஜத்தோடு இணைக்கப்பட்டதாய் (Affiliated) இருக்கவேண்டும்.

15. சைவ சமய வளர்ச்சிக்குரிய நன்னோக்கங்களும் நன் முயற்சிகளும் நிறைவேறுதற்பொருட்டும், உலகம் நலமடைதற் பொருட்டும் சைவருள் ஒவ்வொருவரும் நாடோறும் இறைவனைப் பிரார்த்தனை புரிதலுடன் சைவசபைகளிலும் கோயில்களிலும் வாரந்தோறும் சைவர் பலரும் ஒருங்குகூடி இறைவனை அன்புமிக்க மொழிகளால் வேண்டிக் கொள்ளுதல் கடமையாகும்.

16. இப்போது வழக்கத்திலுள்ள சரியாகிரியா விதிகளும் அவற்றிற் கிணங்கச் செய்யும் முறைகளும் அம்முறை பற்றிச் செய்யுங்காற் சொல்லும் மந்திரங்களுமாகிய எல்லாம் திருமந்திரம் தேவார திருவாசகம் முதலான அருணூல் உதவி கொண்டு தமிழிலேயே அமைத்துக்கொள்ளல் வேண்டும்.

17. "நல்லொழுக்கவாழ்க்கைக்கு" என்பது முதல் "வேத சிவாகமப் பகுதிகளுமாகும்" என்பது ஈறாக மேற் கூறப்பட்டுள்ள நான்கு உண்மைகளையும் ஒத்துக்கொண்டு சைவ நிந்தனை, சைவசமய குரவர் நிந்தனை செய்யாது அவ்வுண்மைகட் கிசைய இயன்றவரை ஒழுகுவோரே சைவராவர். அவர்களே சைவ சபைகளில் வாக்குரிமை முதலியனவுடைய அங்கத்தினராகுந் தகுதியுடையவராவர்.

18. ஆதிதிராவிடர் முதலிய ஒடுக்கப்பட்ட வகுப்பினர்களெல்லோரும் கல்வியறிவொழுக்கம் சமய ஞானம் முதலியவைகளில் முன்னேற்றமடைதற்குச் சைவசபையினர் அனைவரும் அன்போடு முனைந்து உழைக்கவேண்டும்.

19. (க) தேசபாஷையைப் போதிப்பவர் தகுதி, சம்பளம் முதலியவற்றைப்பற்றிச் சென்னைப் பல்கலைக் கழகத்தார் வெளியிட்டுள்ள அறிக்கைகளும் நிபந்தனைகளும் தேசபாஷை வளர்ச்சியைப் பாதிப்பனவாயும் நாட்டிற்குக் கேடு பயப்பனவாயுமிருத்தலின் இவற்றை உடனே ரத்து செய்ய வேண்டுமென்று இம்மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

(உ) தேச பாஷைப் புலமையுடைய பண்டிதர்கள், பட்டதாரிகளைவிட எவ்வகையிலும் தாழ்ந்தவர்களல்லரென்றும், சம்பளவிஷயத்திற் பண்டிதர்களுக்கும் ஏனைய ஆசிரியர்கட்கும் (Lecturers) வேற்றுமை காட்டக் கூடாதென்றும், தேசபாஷைப்பிரிவில் தலைவராயிருப்பவர் புலமையைப் பொருத்தும் உத்தியோக நியமனத்தின் முற்பிற்பாட்டைப் பொருத்துமே தான் சம்பளம் அளிக்கவேண்டுமென்றும் இம்மகாநாடு தெரிவித்துக்கொள்கின்றது.

20. சைவ விரதங்கள் திருவிழாக்கள் முதலியவைகள் சைவப் பஞ்சாங்கப்படி அனுட்டிக்கப்படவேண்டும்.

21. சிவ தீக்கை பெற்றுச் சைவக் கிரியைகள் செய்து வைக்கும் உணர்ச்சி வாய்ந்த சைவர்களைக்கொண்டே அவற்றைச் செய்துகொள்ளல் வேண்டும்.

22. சந்தான குரவர்களான மெய்கண்டதேவர் முதலான நால்வரின் திருவுருவங்களைத் திருக்கோயில்கடோறும் நிறுத்தி வழிபாடாற்றுதல் வேண்டும்.

இவ்வுண்மைகளையுந் தீர்மானங்களையுஞ் சைவராயினு ரொவ்வொருவரும் மேற்கொண்டொழுகுவாராக!

சேரமான்பெருமாள் ஞானஉலா.

சீரார் கமலஞ் சிறந்திருக்கும் பொய்கைதனில்
நீர்வாழு மண்டூக நெஞ்சேகேள்—நேரே
உடன்பிறந்த வாசி உள்ளகத்தே காணாமல்
குடங்கவிழ்நீ ரானதொரு கோலமே—நடம்புரிந்து
நின்றானைத் தேடி நிலையறிந்து பாராம
லன்றோ மதிகெட் டறிவழிந்தாய்—நன்றா
யோரிடத்தி லேபிறந்து ஊரையொன்றுங் காணாமற்
பாரிடமெல் லாமலைந்த பாவியே—பேரெடுத்துக்
காயமெனுங் கூட்டிற் கர்மவினைக் கீடாகி
மாயமெனு மயக்கில் வளைபட்டாய்—நேயம்
பிடித்தவர்க்குப் பேறுதரும் பேசுவார்க் கென்றுங்
நடித்த திருநடனம் நற்பாசம்—பிடித்தே
சென்று கமலத் திருவாசி மண்டபத்தில்
நின்றநிலை காணறியா நெஞ்சமே—யன்று
புரமெரித்த ருத்திரனைப் போற்றி யடிதொழுதே
கரங்குவித்து மாயனைக் கண்டு—தொழுவாங்காண்
மூலாதா ரப்பதியில் முக்கோண முச்சுடரை
காலா லெழுப்பிக் கணபதிதாள்—ஞால
பிரணவத்தாற் காட்டிப் பீசாட் சரநிறுத்தி
சுரோணிதத்தை யாட்டுவிக்குஞ் சூட்சிப்—பிரணவமே
குண்டலியை சுத்தி குருவை யடிதொழுது
மண்டலங்கள் பாரா மேலே மனமேகேள்—வண்டிலமே
காணக் கிடையாது கைதனக்கு மெட்டாது

ஞானங் கருதார்க்கு நாடாது—தோகை
குருவினு பதேசக் கொண்டறிவாய் நெஞ்சே
ஒருவ னுனக்குஉதவி யுண்டாம்—பருவமாய்க்
காலைப் பிடித்துக் கரையேற மாட்டாத
மாலைக் குரங்கே மனமேகேள்—மேலை
தவத்தின் பெருமையால் சற்குருவைச் சார்வதற்கு
அவத்த குணம்படைத்த ஆசையே—சிவத்தை
நெஞ்சில் வைத்து நேசத்தை யுள்ளுருக்கி
பஞ்சாட் சரத்தின் பயனறிவாய்—தஞ்சம்
ஒருவனே தெய்வ மொருவனே யென்றிருந்தால்
வரும்வினைக ளோடி மறைந்திடுமே—ஒருவன்
உலகாய் முதற்பொருளாய் உச்சியி னுட்பொருளாய்ப்
பலவிதமாய் நின்ற பரமன்—நிலைகாண
எவ்வுயிர்க்கு மவ்வுயிரா யீரே ழுலகனைத்து
மவ்வுயிர்க்குட் டானே யரும்பொருளாய்ச்—செவ்வே
யடியார்க் கடியரா யன்புருகி நெஞ்சே
பிடியே பிடித்தவர்க்குப் பேறு—படிகேளாய்
நெஞ்சகத்தை விட்டு நினைப்பவர்க்கு வேறுமில்லை
வஞ்சகத்தை நெஞ்சே மறந்துவிடு—மிஞ்சப்
பேசும் பிதற்றலல்ல மாய்கையல்ல
தூசுமணி நாதந் தூக்கிவிடு—வீசுங்கால
அங்குலமுந் நான்குமறைந் தெட்டு மீண்டுவருங்
கங்குலிலே நாலுங் கழன்றுவிடும்—தொங்கல்
நாடியிடை பிங்கலையாய் நான்மூன்று மிப்படியாய்
யோடி மெலிந்த உருமாறி—வாடித்
தளர்ந்து உடலழிந்து சஞ்சலத்துக் குள்ளாய்க்
கலந்து மெலிந்துவிட் டகத்தையே—உளன்று
பாசமெனுங் கூட்டைப் பார்மீதி லேசுமந்து
நேச மறந்துவிட்டென் னெஞ்சமே—வாசம்
மிருந்த விடமு மெல்லையும்வே றல்லாம
லருந்தவத்துக் கோடி யலைகிறுய்—பொருந்தப்

பார்ப்பதுவு முன்றனுக்குள் பதிப்பதனி லெவ்வறிவும்
காற்பதுவும் நால்வழியே கண்டுக்கெ—கோற்பதுவும்
பாசி பவளம் பலவிதமுந் தான்சேர்த்து
வாசிநூல்க் கோர்வை மலப்பாண்டம்—நாசித்
தெருவே துவாரம் சிறுநூல் சாடதனை
குருவாய் முடிந்துவிட்ட கூத்து—கருவே
தெரியா தெவரெவர்க்கும் தெரிசித்தால் நெஞ்சே
பிரியாது நாழிகையும் பேராது—சரியா
சனத்தி லிருக்கு மதன்பெருமை கண்டால்
மனத்திலே கண்டு மகிழ்ந்துக்கொ—மனத்தில்
அடங்குங் கலமதுகா ணறியாயோ நெஞ்சே
ஒடுங்குந் தலமொடுங்க வுண்மை—நடனங்கேட்க
கொண்டு தகுதியெனக் கொக்கரித்து மேலெழுப்பி
உண்டுலக மெல்லா மூடுருவி—கண்டு
சணத்தில் பிறந்திறந்து தான்மீண்டு தானடங்கும்
மனத்தை யுடையதொரு வாசியினால்—குணத்தைக்கேள்
தேசிகனைப் போற்றிச் சிதம்பரத்து ளேறுதற்கு
வீசி யடிமுடிக்குள் மேலேற்று—மாசி
திரைகடலை நீஞ்சித் தெப்பமெனத் தோன்றி
கரைகடக்க விட்டுவரும் கைவிளக்காய்!

(தொடரும்)

மதிப்புரை

சைவபூஷண சந்திரிகை : இது யாழ்ப்பாணத்து மேலைப்புலோலி நா. கதிரைவேற் பிள்ளையவர்களா லியற்றப்பட்டது. சைவசமயத்தின் அமைப்புகளும் விதிகளும் முறைகளும் பயனும் மிகச் செவ்வையாய் விளக்கப்பட்டிருக்கின்றன. இதனை வெளியிட்டவர் சென்னை, பி. நா. சி. பிரதர்ஸ் என்பார். அழகிய கலிக்காக் கட்டிடமுடையது.

விலை அணா ௧௨.

தாராபுர வெண்பாவந்தாதி. யென்னுமொரு செய்யுணூல் எமது பார்வைக்கு வந்தது. இதன் ஆசிரியர் தாராபுர வழக்கு மன்றத் தலை

வர் திரு கா. ஆறுமுகம் பிள்ளையவர்கள். வெண்பாக்களெல்லாம் தமிழ்ச்சுவைகெழுமிப் பொருட் செழுமை வாய்ந்து திகழுகின்றன. விலை அணா ௩. வேண்டுவோர் இதன் ஆசிரியர்க் கெழுதிப் பெற்றுக் கொள்க.

சமணர் கழுவேற்றம். இதனை இயற்றியவர் பேட்டை திருவாளர் ஆ. ஈசுரமூர்த்திப் பிள்ளை யென்பார். சமணர் கழுவேற்றத்தால் ஞானசம்பந்தப் பெருமானது அருளியல்பு சிறிதுங் கெடுமாறில்லை யென்னும் உண்மை இந்நூலில் மிகச்செவ்வையாய் நிறுவப்பட்டுள்ளது. விலை அணா இரண்டு. விரும்புவோர் 'திருநெல்வேலி ஜில்லா, பேட்டை திரிபுரசுந்தரியம்மன் கோயில் மேலத்தெரு, மெய்கண்டான் நிலையம், திரு. த. ஆ. வேங்கடாசலப் பிள்ளையவர்கட்கு எழுதுக.

போற்றிப்பஃறொடை வினாவெண்பா, புத்துரை. என்னும் உரை நூலைப் பார்த்தேம். இதனை யியற்றிவரும் திருவாளர் ஆ. ஈசுரமூர்த்திப் பிள்ளையவர்களேயாவர். சொற்பொருளுங் கருத்துரையும் விளங்க மிக விரிவாயும் விளக்கமாயும் நன்கெழுதப்பட் டுள்ளது. இஃது ஒவ்வொரு சைவசித்தாந்த மாணாக்கர் கையிலும் இருத்தற்குரியது. விலை அணா, அ. பேட்டை மெய்கண்டான் நிலையத்திற்கே எழுதிப் பெற்றுக் கொள்க.

ஆத்திசூடி உரை. இதன் ஆசிரியர் ராமசுப்பிரமணிய நாவலர்; இது பதுமநாபபுரம் செந்தமிழ் நிலைய வெளியீடாய் வெளிவந்துளது. உரை, கீழ்வகுப்பு மேல்வகுப்பு மாணவர்கட் கேற்றவாறு சொற் பொருளுங் குறிப்புரையும் எழுதப்பட்டிருக்கின்றது. விலை அணா ௪.

திருப்பாதிரிப்புலியூர் தலபுராண வசனம். இது திருப்பாதிரிப் புலியூர் ஸ்ரீ வாகீசர் புத்தகாலயம் திரு. ப. பாலசுந்தர நயினார் அவர்களால் வெளியிடப்பட்டுள்ளது. வரலாறுகள் செய்யுணூலுக் கேற்றபடி விளக்கமாய் எழுதப்பட்டிருக்கின்றன. விலை அணா, ௬.

வேளாள மித்திரன். இப்பெயர்கொண்ட திங்களிதழ் திருவாளர் M. A. பாலசுப்பிரமணியம் அவர்களை ஆசிரியராய்க்கொண்டு கோயமுத்தூரிலிருந்து வெளிவருகின்றது. இது வெறும் இனத்தைப்பற்றியதாகவே இல்லாமல், அரிய பல அரும்பொருட் கட்டுரைகளையும் மேற்கொண்டுலாவுகின்றது. ஆண்டுக்கையொப்பம் ரூபா 2.